# போக்குவரத்துத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

### மானியக் கோரிக்கை எண். 48

**சா.சி. சிவசங்கர்**
போக்குவரத்துத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | அரசு போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பு | 19 |
| 3. | பேருந்து போக்குவரத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் | 82 |
| 4. | சமூக நலத்திட்டங்கள் – "விடியல் பயணத் திட்டம்" | 119 |
| 5. | புதிய பேருந்துகள் கொள்முதல் | 123 |
| 6. | சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் | 129 |
| 7. | நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் | 136 |
| 8. | தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 144 |
| 9. | துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு | 149 |
| 10. | சாலை போக்குவரத்து நிறுவனம் | 157 |
| 11. | பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு | 166 |
| 12. | முடிவுரை | 168 |

# போக்குவரத்துத் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2024 – 2025

## 1. முன்னுரை

### 1.1 கண்ணோட்டம்

போக்குவரத்தானது, பொதுமக்கள் பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கும், பயணம் மேற்கொள்வதற்கும், சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஏறக்குறைய 8.30 கோடி மக்கள்தொகை கொண்ட தமிழ்நாட்டில், ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்கான மக்கள் பொதுப் போக்குவரத்தை சார்ந்துள்ளனர். பொதுப் போக்குவரத்து என்பது ஒரு பகிரப்பட்ட அமைப்பாகும். பலதரப்பட்ட மக்கள் இப்பேருந்துகளில் பயணித்து, இரயில்கள், தனியார் வாகனம், விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்து போன்ற சேவைகளை செய்திட ஏதுவாக இப்பொதுப் போக்குவரத்து உதவுகிறது. சுற்றுச்சூழல் மற்றும் சமூக காரணிகளைக் கருத்தில் கொண்டு

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உயர்தர சேவையை வழங்குவதே பொதுப் போக்குவரத்தின் நோக்கமாகும்.

பேருந்துகள் நிகழ்காலத்திலும், எதிர்வரும் காலங்களிலும் தரைவழி மொத்த போக்குவரத்திற்கான முதன்மை போக்குவரத்தாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பேருந்து அடிப்படையிலான பொதுப் போக்குவரத்து அமைப்புகளும் மாநிலத்தின் பயணிகளின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்வதில் அதிமுக்கிய பங்கு வகிக்கின்றன. கோடிக்கணக்கான மக்களின் வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் மருத்துவம் சார்ந்த பயணங்களுக்காக குறைந்த கட்டணத்தில் பேருந்து சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமில்லாமல், கரியமில வாயு புகை, போக்குவரத்து நெரிசல், புதைபடிவ எரிபொருள் நுகர்வு ஆகியவற்றைக் குறைப்பதற்கும் பாதுகாப்பான பயணத்திற்கும் பேருந்து சேவைகள் பெரிதும் பங்களிக்கின்றன. இதுபோன்ற நன்மைகள்

இருந்தபோதிலும், அதிகரித்து வரும் போக்குவரத்து தேவையுடன் ஒப்பிடும்போது பேருந்துகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. தற்போது, தமிழ்நாட்டின் மொத்த வாகன எண்ணிக்கையில் பேருந்துகள் ஒரு சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளன. இவை, போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதோடு பாதுகாப்பான, வசதியான பயணத்திற்கும் வாய்ப்பாக அமைகிறது. பொதுப் போக்குவரத்து செயல்பாட்டின் விளைவானது மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துகிறது. அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், மாநிலத்தின் பொதுப் போக்குவரத்து இயக்கத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றன.

பேருந்தினை தனிநபர் வாகனங்களோடு ஒப்பிடுகையில் ஒரு நபருக்கு ஒரு கிலோமீட்டருக்கான காற்று மாசின் அளவு மிகக் குறைவாக இருக்கிறது. ஏனெனில் சாலையில் பயணிக்கும் பேருந்தின் அளவு அதே அளவு பயணிகள் தனியார் வாகனங்களில்

பயணிப்பதைவிட குறைவாகும். தனியார் வாகனங்களால் ஏற்படும் வாகன நெரிசலை குறைத்து, காற்று மாசினை குறைக்கவும், எரிபொருள் செலவுகளை மிச்சப்படுத்துவதற்கும், பயண நேரத்தை குறைப்பதற்கும், நகரங்களில் வாகனங்களின் நிறுத்தும் இடங்களில் ஏற்படும் இடர்பாடுகளை குறைக்கவும் பொதுப் போக்குவரத்து சேவைகள் உதவுகிறது. இதன் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தை மேலும் உயர்த்துகிறது.

இந்தியாவின் மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக விளங்கும் தமிழ்நாட்டில், 2011–ஆம் ஆண்டில் நகரங்களில் வசிக்கும் மக்கள்தொகை 48.4 சதவீதமாக இருந்தது. 2031–ஆம் ஆண்டில், 67 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்கள் நகரங்களில் வசிப்பார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 01.05.2024 அன்றுள்ளவாறு, 0.14 கோடி போக்குவரத்து வாகனங்கள் மற்றும் 3.45 கோடி போக்குவரத்து அல்லாத வாகனங்கள் உள்பட மொத்தம் 3.59 கோடி

பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தமிழ்நாட்டில் இயக்கப்படுகின்றன. மொத்த வாகனங்களில், போக்குவரத்து வாகனங்கள் 3.91 சதவீதமாகவும், போக்குவரத்து அல்லாத வாகனங்கள் 96.09 சதவீதமாகவும் உள்ளன. 3.02 கோடி இரு சக்கர வாகனங்கள், தமிழ்நாட்டின் மொத்த வாகன எண்ணிக்கையில் 84.09 சதவீதமாகும். 10.95 சதவீதம் நான்கு சக்கர வாகனங்கள், 0.9 சதவீதம் மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் 84.09 சதவீதம் இரு சக்கர வாகனங்கள் ஆக மொத்தம் பயணிகளின் வாகனங்கள் 95.94 சதவீதமாகும்.

| **போக்குவரத்து** | | |
|---|---|---|
| **இனம்** | **வகை** | **எண்ணிக்கை** |
| கட்டண நிலை பேருந்துகள் | போக்குவரத்துக் கழகங்கள் | 20260 |
| | தனியார் | 7764 |
| | சிற்றுந்து | 2857 |
| | **மொத்தம்** | **30881** |
| ஒப்பந்த வாகனங்கள் | ஆட்டோ ரிக்க்ஷா | 323653 |
| | சாதாரண டாக்ஸி | 2630 |
| | மோட்டார் கேப் | 116240 |
| | மேக்ஸி கேப் | 87824 |
| | ஆம்னி பேருந்துகள் | 1826 |
| | **மொத்தம்** | **532173** |

| **இனம்** | **வகை** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| இதர வாகனங்கள் | தனியார் சேவை வாகனங்கள் | 15579 |
| | கல்வி நிறுவன பேருந்துகள் | 37583 |
| | அவசர ஊர்திகள் | 14402 |
| | தீயணைப்பு வாகனங்கள் | 1799 |
| | **மொத்தம்** | **69363** |
| சரக்கு வாகனங்கள் | சரக்குந்து | 466489 |
| | இழுவை வண்டிகள் | 78331 |
| | இலகுரக வணிக வாகனங்கள் | 192740 |
| | தொடர் வாகனங்கள் | 33372 |
| | **மொத்தம்** | **770932** |
| **போக்குவரத்து வாகனங்கள் – மொத்தம்** | | **1403349** |
| **போக்குவரத்து அல்லாத வாகனங்கள்** | | |
| **இனம்** | **வகை** | **எண்ணிக்கை** |
| தனியார் வாகனங்கள் | இரு சக்கர வாகனங்கள் | 30212698 |
| | மகிழுந்து மற்றும் ஈப்பு | 3659212 |
| இதர வாகனங்கள் | இழுவை வாகனங்கள் | 457922 |
| | மூன்று சக்கர வாகனங்கள் | 68167 |
| | சாலை உருளை வாகனங்கள் | 2545 |
| | இதர வாகனங்கள் | 126516 |
| **போக்குவரத்து அல்லாத வாகனங்கள்** | | **34527060** |
| **மொத்தம்** | | **35930409** |

28,024 கட்டண நிலைப் பேருந்துகள் மற்றும் 2,857 சிற்றுந்துகள் என மொத்தம் 30,881 பேருந்துகள் மாநிலத்தின் பொதுப் போக்குவரத்து அமைப்பில் உள்ளன. கட்டண நிலைப் பேருந்துகளில், அரசுக்குச் சொந்தமான எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களின்

20,260 பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு ஏறத்தாழ 1.76 கோடி மக்கள் பயணிக்கின்றனர்.

### 1.2 அரசின் தொலைநோக்குப் பார்வை

நவீன, செயல்திறன்மிக்க, பொருளாதார, காலநிலை நட்புடன் பாதுகாப்பான போக்குவரத்தை வடிவமைத்து, பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழலின் தேவைகளை சமன்படுத்தும் விதமாக உள்ளூர், நகரப்பகுதி, கிராமப்பகுதி, நகரங்களுக்கிடையே மற்றும் மாநிலங்களுக்கு இடையே போக்குவரத்துச் சேவையை வழங்குவதன் மூலம் கடைக்கோடி மக்களும் பயன்பெறும் வகையில் பேருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே அரசின் தொலைநோக்குப் பார்வையாகும். மேலும், மக்களின் வேலைவாய்ப்பு, கல்வி, மருத்துவம், சந்தைகள், சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள், நகரம் மற்றும் பெரு நகரங்களுக்கு விவசாயப் பொருட்களை விற்பனைக்காக கொண்டு செல்வதற்கான பேருந்து

வசதிகளை ஏற்படுத்துவதாகும். தொலைநோக்கு பார்வையின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு:–

I. பொதுப் போக்குவரத்தை ஊக்குவித்தல் மற்றும் கடைக்கோடி மக்களுக்கும் பேருந்து சேவைகளை மேம்படுத்துதல்;

II. குறைந்த கட்டணத்தில் நட்பாகவும், பாதுகாப்பாகவும், நம்பகமானதாகவும், திறமையானதாகவும் பொது மக்களுக்கு ஏற்ற வகையில் பேருந்து வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல்;

III. மின்சாரம், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG), திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) முதலிய மாற்று எரிபொருளின் உதவியுடன் இயங்கக்கூடிய சுற்றுச்சூழலுக்கு உகந்த பேருந்துகளை பொது மக்கள் பயணிக்கும் வகையில் வழங்குதல்;

IV. மாற்றுத் திறனாளிகள் எளிதாக பயணிக்கக்கூடிய வகையில் பேருந்துகளை அறிமுகம் செய்தல்;

V. தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த இணைக்கப்பட்ட

சேவைகள், நுண்ணறிவு போக்குவரத்து முறைகள் ஆகியவற்றை பயன்படுத்தி இணையத்தின் வழியாக பேருந்துகளை கண்காணித்தல் மற்றும் பயணிகளுக்கான தகவல்களை நிகழ்நேர அடிப்படையில் வழங்குதல்;

VI. பயணச்சீட்டிற்கான கட்டணத்தை எளிதாக செலுத்தி பெறுவதற்கான சிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குதல்;

VII. நிதி தற்சார்பு நிலையை அடைய முயற்சிகள் எடுத்தல்;

VIII. 2030–ஆம் ஆண்டிற்குள் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைதல்.

## 1.3 தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்தின் பரிணாம வளர்ச்சி

1944–ஆம் ஆண்டில், ஆங்கிலேயேர் தலைமையிலான அரசாங்கம் நாட்டிலுள்ள பொதுப் போக்குவரத்தின் நிலையை ஆராய ஒரு குழுவை அமைத்தது. அக்குழு போக்குவரத்துத் துறையை தேசியமயமாக்க பரிந்துரை செய்தது. அதைத் தொடர்ந்து, 1947–ஆம் ஆண்டில், சென்னை

மாகாணத்தில் இயங்கி வந்த தனியார் பேருந்துகளை அரசு கையகப்படுத்தி, 'அரசுப் பேருந்து சேவையை' அறிமுகப்படுத்தியது. காலப்போக்கில், இச்சேவை 'மாநில போக்குவரத்துத் துறை'யாக பரிணாம வளர்ச்சி அடைந்து, தன்னாட்சி அதிகாரத்தை அதிகரிப்பதன் மூலம் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் 'பொதுத்துறை நிறுவனமாக' மாறியது.

பொருளாதார மற்றும் தொழில் மேம்பாட்டிற்கு போக்குவரத்துதான் மிக முதன்மையானது என்பதை உணர்ந்த அரசு, 1972–ஆம் ஆண்டில் மிக அதிக அளவில் பொதுப் போக்குவரத்தில் நேரடி முதலீடுகளை செய்து பொதுப் போக்குவரத்து முறையை அமைத்து, மாநிலத்திற்கு சொந்தமான அரசு போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கியது.

01.01.1972 அன்று, 1956–ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பல்லவன் போக்குவரத்துக் கழகம் நிறுவப்பட்டது. சென்னை மற்றும் செங்கல்பட்டு மாநகரங்களில் இயக்கப்பட்டு வந்த பேருந்துகள்

இக்கழகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு, இதர அரசு போக்குவரத்துக் கழகங்களை துவக்க வழிவகுத்தது. 1972–ஆம் ஆண்டு முதல் 1996–ஆம் ஆண்டு வரை 21 அரசு போக்குவரத்துக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்டன. பின்னர், அவை எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களாக இணைக்கப்பட்டு, குறைக்கப்பட்டன.

இன்றைய நிலவரப்படி, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் பேருந்து சேவைகள் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இதர பகுதிகளில், விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களை தலைமையிடமாகக் கொண்ட ஆறு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் பேருந்து சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. நீண்டதூர விரைவுப் பேருந்துகள் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான பேருந்துகளையும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

திறமையான, தேவையான, சிக்கனமான மற்றும் ஒருங்கிணைந்த சாலைப் போக்குவரத்து சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குவது அரசு போக்குவரத்துக் கழகங்களின் பொறுப்பாகும். அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் தவிர, தனியார் பேருந்து உரிமையாளர்களும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க அனுமதிக்கப்படுகின்றனர். அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் தனியார் பேருந்து இயக்கங்கள் இரண்டிற்கும் பேருந்துக் கட்டண அமைப்பு ஒரே அளவில் இருப்பதை அரசு முறைப்படுத்தி ஒப்புதல் அளிக்கிறது.

அரசுப் பேருந்துகளின் எண்ணிக்கையை பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் நாட்டிலேயே இரண்டாவது பெரிய அரசு போக்குவரத்துக் கழகங்களாகத் திகழ்கின்றன. தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் 1,000 மக்கள் தொகை கொண்ட அனைத்து கிராமங்களும் பயன்பெறும்

வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பேருந்து சேவைகளை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 17,662 கிராமங்களில் 17,322 கிராமங்களுக்கு பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது, கிராமப்புற பேருந்து வசதிகளில் 98.07 விழுக்காடாகும்.


31.03.2024 அன்றுள்ளவாறு, தமிழ்நாட்டிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை 20,260 ஆகும். இப்பேருந்துகள் 317 பேருந்து பணிமனைகளிலிருந்து, 10,132 பேருந்து வழித்தடங்களில், 79 லட்சம் கி.மீ தூரம் 1.11 இலட்சம் பணியாளர்களை கொண்டு, ஒவ்வொரு நாளும் சுமார் 1.76 கோடி பொது மக்களை ஏற்றிச் செல்லும் வகையில் இயக்கப்பட்டு வருகின்றன. அனைத்து பேருந்துகளும் டீசலை எரிபொருளாக பயன்படுத்துகின்றன. பேருந்துகளின் சராசரி வயது 9.08 ஆண்டுகள். பேருந்துகளின் பயன்பாட்டு விகிதம் 90.52 விழுக்காடாகும். பயணிகளின்

அடர்வு விகிதம் 79.43 விழுக்காடாகவுள்ளது. சலுகை கட்டணம் பெறும் பயணிகளுக்கும், கட்டணம் செலுத்தும் பயணிகளுக்கும் இடையிலான விகிதம் 60:40 ஆகும். தினசரி வருவாய் ரூ.37.11 கோடியாகவும், செலவினம் ரூ.54.37 கோடியாகவும், பற்றாக்குறையாக ரூ.17.26 கோடியாகவும் உள்ளது. ஆண்டிற்கு ஆண்டு செலவினங்கள் அதிகரித்து வரும் நிலையிலும், நாட்டிலேயே தமிழகத்தில்தான் பேருந்து கட்டணம் மிகக் குறைவாக உள்ளது. பேருந்து கட்டணம் கடைசியாக 29.01.2018 அன்று மாற்றியமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**1.4 போக்குவரத்துத் துறையின் நிர்வாக அமைப்பு**

மாநிலத்தின் பொதுப் போக்குவரத்திற்கான பேருந்து சேவைகளை போக்குவரத்துத் துறை ஒருங்கிணைத்து, மேற்பார்வையிட்டு வருகிறது. இத்துறையின்கீழ் எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் செயல்படுகிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் வழிநடத்தப்பட்டு, அரசு

கூடுதல் தலைமைச் செயலாளர் நிருவாகத் தலைவராக செயல்படுகிறார். இவர்களுக்கு போக்குவரத்து துறை சார்ந்த பணிகளில் உதவியாக துணைச் செயலாளர், சார்புச் செயலாளர்கள், பிரிவு அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்கள் செயல்படுகிறார்கள்.




போக்குவரத்துத் துறையின் மேற்பார்வையின்கீழ் பின்வரும் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

**1. அரசு போக்குவரத்துக் கழகங்கள்**

i) மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை

ii) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை

iii) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்

iv) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்

v) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்

vi) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்

vii) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை

viii) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி

2. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை

3. சாலை போக்குவரத்து நிறுவனம்

4. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு

போக்குவரத்துத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் பிற நிறுவனமான

சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் அலுவல்வழி தலைவராகவும் உள்ளார்.

அரசால் நியமிக்கப்படும் தலைவர், மேலாண் இயக்குநர் மற்றும் இயக்குநர்கள் உள்ளிட்ட இயக்குநர் குழுமங்கள் போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிடுகின்றன. பொது மேலாளர்கள், துணை மேலாளர்கள், உதவி மேலாளர்கள், கிளை மேலாளர்கள் மற்றும் பணியாளர்கள் போன்ற பல்வேறு பிரிவுகளில் உள்ள அதிகாரிகளின் ஆதரவுடன், தலைமை நிர்வாகியாக பணியாற்றும் மேலாண் இயக்குநரால் அன்றாட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் தொடர்பான பணிகளை மேற்கொள்ள தலைவருக்கு, தலைவர் அலுவலகம் உதவி புரிகிறது.

தென்னக இரயில்வே மேற்கொள்ளும் திட்டங்களுக்கு உதவும் மாநில அரசின் ஒருங்கிணைப்பு அமைப்பாக போக்குவரத்துத் துறை

செயல்படுகிறது. தற்போதுள்ள ரயில்வே உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், புதிய பாதைகளை உருவாக்கவும், தற்போதைய பாதைகளை விரிவுபடுத்தவும், மாநிலத்திற்குள் பாதைகளை மேம்படுத்தவும் இரயில்வே துறையுடன் இணைந்து செயல்படுகிறது.

## 2. அரசு போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பு

### 2.1 அரசு போக்குவரத்துக் கழகங்களின் இயக்க பகுதிகள்

அரசு போக்குவரத்துக் கழகங்கள் மாநிலத்திற்குள்ளும், புதுச்சேரி, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய அண்டை மாநிலங்களுக்கும் சாலை அடிப்படையிலான பயணத்திற்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை 20,260 ஆகும். அதில் 18,728 வரையறுக்கப்பட்ட பேருந்துகளும், 1,532 மாற்று பேருந்துகளும் உள்ளன. மாநிலத்தில் சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அரசு போக்குவரத்துக் கழகங்களும், பிற மாவட்டங்களில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்தும் போக்குவரத்து சேவைகளை வழங்குகின்றன.

மாநிலத்தில் எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன. ஒவ்வொரு போக்குவரத்துக்

கழகத்தின் செயல்பாடுகளை உள்ளடக்கிய மண்டல மற்றும் மாவட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண். | அரசு போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட். | சென்னை | சென்னை பெருநகரப் பகுதி |
| 2. | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், | – | தமிழ்நாடு முழுவதும், கேரளா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் புதுச்சேரி |
| 3. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட். | விழுப்புரம் | விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி |
| | | வேலூர் | வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் |
| | | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு |
| | | திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| | | திருவள்ளூர் | திருவள்ளூர் |
| | | கடலூர் | கடலூர் |
| 4. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட். | சேலம் | சேலம் மற்றும் நாமக்கல் |
| | | தருமபுரி | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி |

| வ. எண். | அரசு போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | உள்ளடக்கிய மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 5. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட். | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் |
| | | உதகமண்டலம் | நீலகிரி |
| | | ஈரோடு | ஈரோடு |
| | | திருப்பூர் | திருப்பூர் |
| 6. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட். | கும்பகோணம் | தஞ்சாவூர் |
| | | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை |
| | | திருச்சி | திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் |
| | | கரூர் | கரூர் |
| | | காரைக்குடி | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் |
| | | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 7. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட். | மதுரை | மதுரை |
| | | திண்டுக்கல் | திண்டுக்கல் மற்றும் தேனி |
| | | விருதுநகர் | விருதுநகர் |
| 8. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட். | திருநெல்வேலி | திருநெல்வேலி மற்றும் தென்காசி |
| | | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| | | நாகர்கோவில் | கன்னியாகுமரி |

அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் பகுதிகள் கீழே உள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன:-



## 2.2 அரசு போக்குவரத்துக் கழகங்களின் உள்கட்டமைப்பு

31.03.2024 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் வாரியான உள்கட்டமைப்பு, பேருந்துகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | அரசு போக்குவரத்துக் கழகங்கள் | மண்டலம் | பணிமனைகள் | தொழிற்கூடம் | வாகன ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி | பேருந்துகள் | பணியாளர்களின் எண்ணிக்கை | பயணிப்போரின் எண்ணிக்கை (இலட்சத்தில்) 2023–24 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மா.போ.க., சென்னை | 1 | 32 | 2 | 1 | 3347 | 19415 | 11445.51 |
| 2 | அ.வி.போ.க., சென்னை | 1 | 22 | 2 | 1 | 1073 | 4661 | 223.05 |
| 3 | விழுப்புரம் | 6 | 57 | 3 | 6 | 3337 | 19061 | 9775.84 |
| 4 | சேலம் | 2 | 32 | 2 | 4 | 2054 | 11124 | 6962.17 |
| 5 | கோயம்புத்தூர் | 4 | 43 | 2 | 2 | 2843 | 15254 | 9887.90 |
| 6 | கும்பகோணம் | 6 | 61 | 4 | 7 | 3496 | 18790 | 11385.00 |
| 7 | மதுரை | 3 | 40 | 3 | 3 | 2390 | 13184 | 7746.52 |
| 8 | திருநெல்வேலி | 3 | 30 | 2 | 2 | 1720 | 9530 | 7112.86 |
| **மொத்தம்** | | **26** | **317** | **20** | **26** | **20260** | **111019** | **64538.85** |

## 2.3 பேருந்து இயக்கங்கள்

மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை 20,260 ஆகும். அதில் 18,728 வரையறுக்கப்பட்ட பேருந்துகளும், 1,532 மாற்று

பேருந்துகளும் உள்ளன. அனுமதிக்கப்பட்ட 10,132 வழித்தடங்களில் சமவெளி மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் வெளியிடப்பட்டுள்ள கால அட்டவணையின்படி பேருந்து சேவைகள் முறையாக இயக்கப்படுகின்றன. இயக்கப்படும் கிலோ மீட்டர்களின் அடிப்படையில் பேருந்துகள் நகர்/புறநகர்/மலைப் பகுதி என வகைப்படுத்தப்பட்டுள்ளன. அரசு போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பேருந்து சேவைகள், குறிப்பிட்ட நிறுத்தங்கள், வசதிகளின் அடிப்படையில் வேறுபட்ட கட்டணத்துடன் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:–

| நகர் பேருந்து | புறநகர் பேருந்து | மலைப் பகுதி |
|---|---|---|
| சாதாரண, விரைவு, குறிப்பிட்ட நிறுத்தப் பேருந்து, சொகுசு மற்றும் குளிர்சாதனப் பேருந்து | சாதாரண, சொகுசு / விரைவு, நவீன சொகுசு, அதிநவீன சொகுசு, குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை), அதிநவீன குளிர்சாதனமில்லா சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன், அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன், குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன், குளிர்சாதன இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட பேருந்து | சாதாரண மற்றும் விரைவு – சொகுசு பேருந்துகள் |


31.03.2024 அன்றுள்ளவாறு, பேருந்து சேவைகளின் விவரங்கள் பின்வருமாறு:-

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | நகர் | | புறநகர் | மலைப் பகுதி | வரையறுக்கப்பட்ட சேவைகள் | மாற்று பேருந்துகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரண (விடியல் பயணம்) | குறிப்பிட்ட நிறுத்தங்கள் / விரைவு / சொகுசு | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (6) + (7) |
| மா.போ.க., சென்னை | 1,559 | 1,674 | 0 | 0 | 3,233 | 114 | 3347 |
| அ.வி.போ.க., சென்னை | 0 | 0 | 1,000 | 0 | 1,000 | 73 | 1,073 |
| விழுப்புரம் | 1,036 | 0 | 1,955 | 29 | 3,020 | 317 | 3,337 |
| சேலம் | 814 | 23 | 1,038 | 25 | 1,900 | 154 | 2,054 |
| கோயம்புத்தூர் | 991 | 180 | 1,030 | 358 | 2,559 | 284 | 2,843 |
| கும்பகோணம் | 1,229 | 28 | 1,927 | 0 | 3,184 | 312 | 3,496 |
| மதுரை | 890 | 380 | 837 | 64 | 2,171 | 219 | 2,390 |
| திருநெல்வேலி | 660 | 156 | 845 | 0 | 1,661 | 59 | 1,720 |
| **மொத்தம்** | **7,179** | **2,441** | **8,632** | **476** | **18,728** | **1,532** | **20,260** |

## 2.4 அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறன்

2023-2024-ஆம் நிதியாண்டில், அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் நாளொன்றுக்கு சுமார் 1.76 கோடி பயணிகள் பயணம் மேற்கொண்டனர். 2018-2019-ஆம் ஆண்டில், கொரோனா பெருந்தொற்றிற்கு முந்தைய நிலையைவிட

பேருந்துகளில் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அரசு போக்குவரத்துக் கழகங்கள் பணியாளர்களின் பற்றாக்குறையை எதிர்கொண்ட போதிலும், பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க, பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை செயல்படுத்தி கழகங்களின் வருவாயை அதிகரித்துள்ளது. அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை கீழ்க்கண்ட வரைபடத்தில் காணலாம்:–



இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் குறைந்த கட்டணத்தில் கட்டண நிலைப் பேருந்துகளை இயக்கி வருகின்றன.

ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா பேருந்து கட்டணங்களுடன் தமிழ்நாடு பேருந்து கட்டண ஒப்பீடு பின்வருமாறு:–

| மாநிலம் | கடைசியாக கட்டணம் திருத்தியமைக்கப்பட்ட நாள் | புறநகர் பேருந்துகள் (ஒரு கிலோமீட்டருக்கு பைசாவில்) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சாதாரண | சாதாரண சொகுசு | விரைவு / நவீன சொகுசு பேருந்து | அதிநவீன சொகுசு | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து (இருக்கை) | | அதிநவீன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் (குளிர்சாதனமில்லாதது) | | அதிநவீன குளிர்சாதன சொகுசு பேருந்து படுக்கை வசதியுடன் | |
| | | | | | | வேலை நாட்கள் | இதர நாட்கள் | வேலை நாட்கள் | இதர நாட்கள் | வேலை நாட்கள் | இதர நாட்கள் |
| தமிழ்நாடு | 29.01.2018 | 58 | 75 | 85 | 100 | 130 | 110 | 155 | 135 | 200 | 180 |
| ஆந்திர பிரதேசம் | 1.07.2022 | 102 | 125 | – | 162 | 196 | 196 | 221 | 221 | 260 | 260 |
| கர்நாடகா | 26.02.2020 | 66 | 123 | – | 145 | 214 | – | 163 | – | 240 | – |

அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண விகிதத்தை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளில் 10 கிலோ மீட்டருக்கான கட்டண

விகிதம் குறைவாக உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

(ரூபாயில்)

| மாநிலம் | சாதாரண பேருந்து கட்டணம் | விரைவு பேருந்து கட்டணம் |
|---|---|---|
| தமிழ்நாடு | 8.00 | 12.00 |
| ஆந்திரப் பிரதேசம் | 20.00 | 30.00 |
| கர்நாடகா | 15.00 | 16.00 |

மேலும், அண்டை மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையேயான பயணக் கட்டண விகிதத்தை ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் இயக்கப்படும் புறநகரப் பேருந்துகளில் 100 கிலோ மீட்டருக்கான கட்டண விகிதம் குறைவாக உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

(ரூபாயில்)

| மாநிலம் | சாதாரண பேருந்து கட்டணம் | விரைவு பேருந்து கட்டணம் | அதி நவீன சொகுசு | குளிர்சாதன பேருந்து கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | | | இருக்கை | படுக்கை |
| தமிழ்நாடு | 58.00 | 75.00 | 100.00 | 130.00 | 200.00 |
| ஆந்திரப் பிரதேசம் | 102.00 | 125.00 | 162.00 | 196.00 | 260.00 |
| கர்நாடகா | 66.00 | 123.00 | 145.00 | 214.00 | 240.00 |

## 2.5. இயக்கச் செயல்பாட்டுத் திறன் குறியீடுகள்

தமிழ்நாட்டில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களின் முக்கிய செயல்பாட்டுத் திறன் குறியீடுகள் பின்வருமாறு:–

| பொருள் | 2023-24 |
|---|---|
| பேருந்துகளின் எண்ணிக்கை | 20,260 |
| வரையறுக்கப்பட்ட பேருந்து சேவைகள் | 18,728 |
| ஒரு நாள் இயக்கப்படும் மொத்த தூரம் (இலட்சம் கி.மீ) | 78.70 |
| எரிபொருள் செயல்திறன் (கி.மீ / லிட்டருக்கு சராசரியாக) | 5.25 |
| கழிவு செய்யப்பட்ட உருளிப்பட்டை ஓடிய தூரம் (லட்சம் கி.மீ) | 3.13 |
| பேருந்து ஒன்றுக்கு நபர் | 5.93 |

## 2.6 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிச் செயல்திறன்

அரசு போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பான பேருந்து சேவைகளை மக்களுக்கு வழங்குவதுடன், தனியார் போக்குவரத்து நிறுவனங்களுக்கு வலுவான போட்டியாளராக உருவெடுத்துள்ளது. கிராமப்புற, மலைப் பகுதி உள்பட இலாபமற்ற பகுதி மற்றும் வானிலை சவால்களை எதிர்கொண்டும் பேருந்து சேவைகளை வழங்கி வருகின்றன. அரசு

போக்குவரத்துக் கழகங்கள் குறைந்த கட்டணத்தில் நம்பகமான, பாதுகாப்பான பேருந்து சேவைகளை வழங்குகின்றன. பிற மாநில போக்குவரத்துக் கழகங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் அதிக நம்பகத்தன்மை, குறைந்த செலவு மற்றும் பாதுகாப்பான சேவை போன்றவற்றைப் பொறுத்தவரையில் சிறந்த செயல்பாடுகளைக் கொண்டுள்ளன. இருப்பினும், எரிபொருள் விலையேற்றம், பணியாளர்களின் ஊதியம் மற்றும் கடனுக்கான வட்டி ஆகியவை அதிகரித்து வருவதால், அரசு போக்குவரத்துக் கழகங்கள் தற்போது கடுமையான நிதி நெருக்கடியினை எதிர்கொண்டு வருகின்றன. நட்டத்தில் இயங்கி வந்தாலும், அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்து வழங்கி வருகின்றன. பொதுப் போக்குவரத்து என்பது இயக்கத்தை வசதிப்படுத்துவது மட்டுமல்லாமல், மாசுபாட்டைக் குறைப்பதிலும், சாலை நெரிசலைக்

குறைப்பதிலும், எரிபொருள் செலவைக் குறைப்பதிலும் பங்கு வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு போக்குவரத்துக் கழகங்கள் அதன் அன்றாட செயல்பாடுகளில் கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், தொடர்ந்து சிறந்த சேவையை அளித்து வருகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் கூட்டாக 2023–2024–ஆம் நிதியாண்டில் மாதத்திற்கு ரூ.526 கோடிக்கு மேல் இழப்பை சந்தித்தன. இது கொரோனாவிற்கு முந்தைய காலத்தில் அதாவது 2019–2020–ஆம் ஆண்டில் ஏற்பட்ட இழப்பான ரூ.436 கோடியை விட 20.64 சதவீதம் கூடுதலாகும். இருப்பினும், நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும், 14–வது ஊதிய உயர்வு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தியதன் காரணமாக பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. மேலும், 2023–2024–இல் அகவிலைப்படியும் உயர்த்தப்பட்டுள்ளது. செலவு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் இழப்பு ரூ.526 கோடியாக

குறைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து, சேவைத் துறையாக இருப்பதால் கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும், அரசு போக்குவரத்துக் கழகங்கள் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சேவை வழங்குவதால், ஜனவரி 2018–இல் நிர்ணயிக்கப்பட்ட அளவிலேயே பேருந்து கட்டணம் உள்ளது.

2019–2020–ஆம் ஆண்டு முதல் 2023–2024–ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கான நிதி செயல்திறன் பின்வருமாறு:–

(ரூபாய் கோடியில்)


| விவரங்கள் | 2019-20 (கொரோனாவிற்கு முன்) | 2020-21 (கொரோனாவிற்கு காலம்) | 2021-22 (கொரோனாவிற்கு காலம்) | 2022-23 | 2023-24 (தணிக்கைக்கு முன்) |
|---|---|---|---|---|---|
| இயக்க வருவாய் | 8,827.39 | 3,529.92 | 5,534.90 | 7,386.04 | 7457.21 |
| மகளிர் கட்டணமில்லா பயணம் | - | - | 1216.83 | 2512.38 | 2802.75 |
| உயர்வேக டீசல் எண்ணெய் மானியம் | 237.55 | 268.16 | 1014.63 | 1783.85 | 1721.06 |
| மாணவர்கள் பேருந்து கட்டணச் சலுகை | 1,274.85 | 1,261.04 | 1,289.07 | 1429.88 | 1411.35 |
| இயக்கம் அல்லாத ஏனைய வருவாய் | 206.14 | 313.11 | 567.53 | 654.62 | 147.74 |
| இதர கழிவுகள் விற்பனை | 26.59 | 94.25 | 74.27 | 68.51 | 41.04 |
| **மொத்த வருவாய்** | **10572.52** | **5,466.48** | **9,697.23** | **13,835.28** | **13,581.15** |
| உயர்வேக டீசல் எண்ணெய் | 3860.32 | 1961.91 | 3865.14 | 5252.11 | 5263.78 |
| இதர செலவுகள் (மசகு எண்ணெய், டயர், உதிரி பாகங்கள் மற்றும் இதர | 312.15 | 127.15 | 277.02 | 416.45 | 390.64 |
| சம்பளம் & தினக் கூலி (வருங்கால வைப்புநிதி, பணிக்கொடை மற்றும் இதர செலவுகள்) | 8,849.63 | 8,766.98 | 8,987.92 | 10,858.23 | 10,824.14 |
| மோட்டார் வாகன வரிகள் | 196.45 | 105.01 | 162.42 | 185.44 | 197.74 |
| தேய்மானம் | 540.65 | 635.99 | 384.09 | 229.36 | 216.46 |
| **வட்டி** | **1177.65** | **1581.4** | **1818.14** | **2255.49** | **2477.73** |
| இதர செலவுகள் (வருங்கால வைப்பு நிதி இழப்பு, சுங்க வரி, விபத்து இழப்பீடு, பங்களிப்பு ஓய்வூதிய வட்டி | 866.23 | 616.57 | 824.71 | 716.09 | 528.15 |
| **மொத்த செலவுகள்** | **15,803.08** | **13,795.01** | **16,319.44** | **19,913.17** | **19898.64** |
| **நட்டம்** | **5230.56** | **8328.53** | **6622.21** | **6077.89** | **6317.49** |
| **சராசரி மாத நட்டம்** | **435.88** | **694.04** | **551.85** | **506.49** | **526.45** |

## 2.7 செயல்பாட்டு செலவினத்தின் முக்கிய காரணிகள்

2023–2024–ஆம் நிதியாண்டில், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு நிருவாகச் செலவு, அதிவேக டீசல் விலையேற்றம் மற்றும் கடன்களுக்கான வட்டி ஆகியவை செயல்பாட்டுச் செலவினத்தின் முக்கிய காரணிகளாக உள்ளன. இந்தக் காரணிகள், அரசு போக்குவரத்துக் கழகங்களால் ஏற்படும் பெரும்பாலான செலவினங்களுக்கு காரணமாகின்றன.

| வ. எண். | இயக்கச் செலவு வகைகள் | சதவீதத்தில் |
|---|---|---|
| 1. | ஊதியம் மற்றும் கூலி, வருங்கால வைப்பு நிதி & ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் இதர பண பயன்கள் | 54.40 |
| 2. | அதிவேக டீசல் | 26.45 |
| 3. | மாறுபடும் செலவினங்களான உருளிப்பட்டை, உதிரி பாகங்கள் | 1.96 |
| 4. | மோட்டார் வாகன வரி | 0.99 |
| 5. | கடன்களுக்கான வட்டி | 12.45 |
| 6. | இதர செலவு | 3.75 |
| | **மொத்தம்** | **100.00** |

2016 முதல் 2024 வரையிலான ஆண்டிற்கான பல்வேறு செலவினங்களின் வரைபட விவரங்கள் சதவீதத்தில் பின்வருமாறு:–




2022–2023–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2023–2024–ஆம் நிதியாண்டில் சம்பளம், தொழிலாளர் வைப்பு நிதி, பணிக்கொடை மற்றும் எரிபொருள் செலவு போன்ற நிருவாகச் செலவுகள் மாறாமல் உள்ளது. இருப்பினும், கொரோனா பெருந்தொற்றின் விளைவாக ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறையினால், குறிப்பாக சம்பளம் மற்றும் ஓய்வூதியங்களை வழங்குவதற்காக வாங்கிய கடன்களுக்கான வட்டியுடன் கூடிய செலவினம் சிறிது அதிகரித்துள்ளது.

### 2.8 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் (TDFC) வழங்கும் நிதி உதவி

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் என்பது தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனமாகும். பொதுமக்கள், அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து வைப்புத் தொகையை திரட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும். வைப்பீட்டாளர்களுக்கு வட்டியை வழங்குவதற்கும், அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளை நிலை நிறுத்துவதற்கும் இந்த வைப்புத்தொகைகள் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு கடனாக கொடுக்கப்படுகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்கள் செயல்பாட்டு மூலதனத்திற்கு நியாயமான வட்டி விகிதத்தில் எளிதாகக் கடன் பெற முடிகிறது. 2023–ஆம் ஆண்டு வரை போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இந்நிறுவனம் செயல்பட்டது. தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் ஆகியவற்றின் நிர்வாக

செயல்பாட்டினை மேம்படுத்திட 2023–ஆம் ஆண்டு நிதித் துறைக்கு இந்நிறுவனம் மாற்றப்பட்டது. மாற்றத்திற்கு பின்னரும், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தொடர்ந்து கடன் உதவி வழங்கி வருகிறது.

**2.8.1** 31.03.2024 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகங்கள் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய மொத்தக் கடன்கள் ரூபாய் 18,178.81 கோடியாகும். அதன் விவரம் பின்வருமாறு:–

(**ரூபாய் கோடியில்**)

| **விவரம்** | **தொகை** |
|---|---:|
| வாகன கொள்முதல் கடன் | 589.76 |
| குறுகிய கால கடன் | 5981.82 |
| நடைமுறை மூலதனத்திற்காக பருவக் கடன் | 11607.23 |
| **மொத்தம்** | **18178.81** |

**2.8.2 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் கடந்த பத்து ஆண்டுகளாக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ள நிதியுதவி விவரம் பின்வருமாறு:–**

(**ரூபாய் கோடியில்**)

| **ஆண்டு** | **நிதியுதவி** |
|---|---|
| 2014–2015 | 2151.24 |
| 2015–2016 | 2776.33 |
| 2016–2017 | 3574.32 |
| 2017–2018 | 3757.58 |
| 2018–2019 | 3445.75 |
| 2019–2020 | 6190.11 |
| 2020–2021 | 7725.25 |
| 2021–2022 | 10786.33 |
| 2022–2023 | 12573.33 |
| 2023–2024 | 14237.14 |

கொரோனா பெருந்தொற்றினால் கழகங்களுக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடியினை சமாளிக்க வேண்டியதன் அவசியத்தால், 2021–2022–ஆம் ஆண்டு முழுவதும் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி

நிதி நிறுவனத்திடமிருந்து பெறப்படும் கடன்களின் அளவு அதிகரித்துள்ளது.

2.8.3 **தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவும் வகையில் குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை கீழ்க்கண்டவாறு வழங்கி வருகிறது:–**

| விவரம் | வட்டி வீதம் | நாளன்றுள்ளவாறு |
|---|---|---|
| வாகன கொள்முதல் கடன் | 6.90% | 01.04.2021 |
| நீண்ட கால கடன் | 6.70% | 01.04.2023 |

வங்கிக் கடன்களை எந்தவித கூடுதல் கட்டணமின்றி அதே விகிதத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்குகிறது

## 2.9 அரசின் நிதியுதவி

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன உதவி, கடன்கள், வழிவகை முன்பணம் மற்றும் மானியத்தின் மூலம் அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இந்நிதியுதவி புதிய பேருந்துகளை வாங்குவதற்கும், ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கான சட்டப்பூர்வ ஓய்வூதிய நிலுவைத்தொகைகள் மற்றும்

மோட்டார் வாகன விபத்து இழப்பீடு வழங்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. பெண்கள், மாணவர்கள், மூத்த குடிமக்கள் மற்றும் இதர சலுகை கட்டணதாரர்களுக்கு கட்டணமில்லா பயணச் சலுகை வழங்குவதால் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் நிதி இழப்பினை அரசு ஈடு செய்கிறது. மேலும், அதிவேக டீசலின் விலை உயர்வை ஈடுகட்ட கழகங்களுக்கு கூடுதல் நிதியுதவி அரசு வழங்கி வருகிறது. கொரோனா பெருந்தொற்று பொதுப் போக்குவரத்தை குறிப்பிடத்தக்க வகையில் பாதித்துள்ளது. இதனால் கழகங்களின் வருவாய் மற்றும் பயணிகளின் எண்ணிக்கை குறைந்தது. கொரோனா பெருந்தொற்றின்போதும், அதற்கு பின்பும் போக்குவரத்துக் கழகங்கள் கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டது. இருப்பினும், அரசு உரிய வகையில் நிதியுதவி வழங்கி ஆதரித்து வருகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில் வரவு

செலவு ஒதுக்கீட்டில் கீழ்க்காணும் இனங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது:–

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | பொருள் | வரவு செலவு திட்ட மதிப்பீடு 2024–2025 |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு பங்கு மூலதன நிதியுதவி | 500.00 |
| 2. | மாணவர்களுக்கு பேருந்துக் கட்டணச் சலுகைக்காக ஏற்படும் சமுதாயச் செலவை ஈடுசெய்தல் | 1521.00 |
| 3. | மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணச்சீட்டு வழங்கியதால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்தல் | 3050.00 |
| 4. | பங்கு மூலதன நிதியுதவி (KfW) | 665.00 |
| 5. | அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கடன் (KfW) வழங்குதல் | 1235.00 |
| 6. | மூத்த குடிமக்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதிச் சீட்டு வழங்குவதால் ஏற்படும் இழப்பினை ஈடுசெய்தல் | 22.00 |
| 7. | அதிவேக டீசல் எண்ணெய் விலையேற்றம் / மேல்வரி விதிப்பு காரணமாக ஏற்படும் விலை வித்தியாசத் தொகையை திரும்ப வழங்குதல் | 1800.00 |
| 8. | உலக வங்கி / ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி உதவியுடன் சென்னை நகர கூட்டாண்மை பேருந்து சேவை வழங்கலுக்கான செயல்திறன் அடிப்படையிலான ஒப்பந்தத்தை செயல்படுத்துதல். | 368.25 |
| 9. | உலக வங்கி / ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் உதவியுடன் சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தின்கீழ் நகர்ப்புற போக்குவரத்தை மேம்படுத்துதல். | 500.00 |
| 10. | விபத்து இழப்பீட்டு தொகை | 30.00 |
| 11. | இதர இனங்கள் | 10.83 |
| **மொத்தம்** | | **9702.08** |

## 2.10 பொது சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

### i) புதிய பேருந்து வழித்தடங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் மீண்டும் பேருந்தை இயக்க தொடங்குதல்

பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப, சமீபத்தில் வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கு புதிய பேருந்து வழித்தடங்களை அறிமுகப்படுத்தியும் அல்லது ஏற்கெனவே உள்ள வழித்தடங்களை அப்பகுதிக்கு அருகில் விரிவுபடுத்தியும் புதிய பேருந்து இணைப்பு வசதி வழங்கப்பட்டுள்ளது. 07.05.2021 முதல் 31.03.2024 வரை 380 நீட்டிக்கப்பட்ட வழித்தடங்களில் 711 கூடுதல் பேருந்து சேவைகளையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளன. அதேபோன்று, முன்பு நிறுத்தப்பட்ட சில வழித்தடங்களுள் 499 வழித்தடங்களில் 607 பேருந்து சேவைகள் அரசால் மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றன.

| அரசு போக்குவரத்துக் கழகங்கள் | நீட்டிக்கப்பட்ட வழித்தடங்கள் (எண்ணிக்கையில்) | | மீண்டும் தொடங்கப்பட்ட வழித்தடங்கள் (எண்ணிக்கையில்) | |
|---|---|---|---|---|
| | வழித் தடங்கள் | பேருந்து சேவைகள் | வழித் தடங்கள் | பேருந்து சேவைகள் |
| மா.போ.க., சென்னை | 106 | 409 | 74 | 123 |
| அ.வி.போ.க., சென்னை | 18 | 35 | 27 | 44 |
| விழுப்புரம் | 133 | 138 | 76 | 77 |
| சேலம் | 12 | 12 | 4 | 6 |
| கோயம்புத்தூர் | 79 | 85 | 16 | 16 |
| கும்பகோணம் | 19 | 18 | 95 | 90 |
| மதுரை | – | – | 52 | 56 |
| திருநெல்வேலி | 13 | 14 | 155 | 195 |
| **மொத்தம்** | **380** | **711** | **499** | **607** |

### ii) சென்னையில் போக்குவரத்து இணைப்பில்லா கடைக் கோடி பகுதிகளுக்கு போக்குவரத்து இணைப்பு

பேருந்துகளை இயக்க இயலாத குறுகலான சாலைகளில் சிற்றுந்துகளை இயக்குவதன்மூலம் கடைக்கோடி மக்கள்கூட சென்னையில் உள்ள பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு வந்தடைய முடிகிறது. மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் 146 சிறிய பேருந்துகளை இயக்குகிறது.

இவற்றில் நகரத்தின் உள்பகுதிகளை மெட்ரோ இரயில் நிலையத்துடன் இணைத்து 56 சிறிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்த 56 சிறிய பேருந்துகளில் 22 சிறிய பேருந்துகள் குறிப்பாக மெட்ரோ இரயில் நிலையத்தை இணைப்பதற்கு மட்டுமே இயக்கப்படுகின்றன. இயக்கப்படாத சிறிய பேருந்துகளை சிறந்த முறையில் பயன்படுத்த, மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனமும் இணைந்து மெட்ரோ இரயில் நிலையங்களுக்கு புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இம்முயற்சியினால், மெட்ரோ இரயிலில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கான வருவாய் அதிகரிக்கும்.

**2.11 கட்டணச் சலுகைகள்**

பொதுப் போக்குவரத்து பேருந்தில் சலுகை கட்டணத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட கட்டணங்கள் இல்லாமலோ அல்லது

குறைந்த கட்டணங்களிலோ பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். குறைந்த வருமானத்தினால் சமூகத்திலிருந்து விலக்கு பெற்றவர்கள் அல்லது பின்தங்கியவர்களை முன்கொண்டு வருவதே இச்சலுகை அளிப்பதன் முக்கிய நோக்கமாகும். கூடுதலாக கல்வி மேம்பாடு ஒரு குறிப்பிட்ட நோய்க்காக அடிக்கடி மருத்துவமனைக்கு செல்பவர்கள், மூத்த குடிமக்கள் போன்றவர்களுக்கும் சலுகைகள் பயன்படுகின்றது. நடைமுறையில் உள்ள சலுகை திட்டங்களில் பின்வருவன அடங்கும்:–

**பயணக் கட்டணச் சலுகை வழங்கப்படும் பயணாளிகளின் வகைகள் பின்வருமாறு:–**

1. நாடாளுமன்ற / சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர்கள்.
2. பெண் பயணிகள், திருநங்கைகள், 40% மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர்.
3. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிக்கை நிருபர்கள் / ஊடக நபர்கள்.

4. மத்திய / மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்கள், விதவைகள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்கள்.

5. புற்று நோயாளிகள்.

6. நாடகக் கலைஞர்கள் அவர்கள் கொண்டு வரும் இசைக் கருவிகள்.

7. எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோயாளிகள்.

8. மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டை (60 வயதிற்கு மேற்பட்டோர்) – குளிர்சாதன பேருந்துகளை தவிர்த்து சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மட்டும்.

**ii) மாணவர்களுக்கான சிறப்புச் சலுகைகள்**

தமிழ்நாட்டின் கல்வியறிவு விகிதத்தை அதிகரிக்கவும், இளைஞர்களுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்கவும், அவர்களின் திறன்களை மேம்படுத்தவும், சிறந்த வேலை வாய்ப்புகள் மற்றும் பொருளாதார நிலை தன்மை பெறுவதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகப்

பேருந்துகளிலும் பயணிக்க மாணவர்களுக்கு இலவச பயணச் சலுகைகளை அரசு வழங்கி வருகிறது. (அரசு விரைவு போக்குவரத்து கழகம் தவிர):–

1. அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகள் (1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை).
2. தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்.
3. அரசு பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்.
4. அரசு தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்.
6. சமுதாயக் கல்லூரிகள்.
7. அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சிக் கூடங்கள்.
8. அரசு இசைக் கல்லூரிகள்.
9. சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சிக் கூடங்கள்.

**iii) 50% பயணக் கட்டணச் சலுகை**

1. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகள்
2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள்
3. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பொறியியல் கல்லூரிகள்

வரிசை எண்.i, ii மற்றும் iii ஆகியவற்றில் தெரிவித்துள்ள அனைத்து சலுகை கட்டணங்களையும் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடுசெய்து தொகை வழங்கப்படுகிறது என்பதை அரசு உறுதி செய்கிறது.

**iv) விருப்பம் போல் பயணம் செய்ய மாதாந்திரப் பயணச்சீட்டுகள்**

நகரங்களில், குறிப்பிட்ட பணியாளர்கள் தங்கள் பணி தொடர்பான பயணங்களுக்காக தினசரி ஒரு நாளில் பல பயணங்களை மேற்கொள்கின்றனர். சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர், திருப்பூர், ஈரோடு மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் இதுபோன்ற வகைப் பயணிகளுக்கு பயனளிக்கும் பொருட்டு, மாதாந்திரப் பயணச் சீட்டானது, ரூ.1,000/- கட்டண விகிதத்தில் விருப்பம் போல் பயணம் செய்ய சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகின்றன.

**v) மூன்றில் ஒரு பங்கு கட்டணச் சலுகை**

மாநகர் / நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வழக்கமாக பயணம் செய்யும் பயணிகளின் வசதிக்காக நடைமுறையில் இருந்து வரும் மூன்றில் ஒரு பங்கு பயணக் கட்டணச் சலுகைத் திட்டம் பயணிகளிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

**vi) குழு பயணச்சீட்டு சலுகை**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் குழுவாக பயணம் செய்ய பயணச்சீட்டு முன்பதிவு செய்பவர்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு 10 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

**vii) ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் கட்டணமில்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

## 2.12 பணியாளர்கள் நலன் தொடர்பான நடவடிக்கைகள்

### 2.12.1 ஊதிய ஒப்பந்தம்

தொழிற் தகராறு சட்டம், 1947 பிரிவு 12(3)–இன் படி, அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகத்திற்கும் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு

இடையே குறிப்பிட்ட வகை பணியாளர்களுக்கென ஊதிய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் உரிய கால இடைவெளியில் நடத்தப்படுகின்றன. 1977–ஆம் ஆண்டு முதல், அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுடன் மொத்தம் 14 ஊதிய ஒப்பந்தங்கள் வெற்றிகரமாக செய்து முடிக்கப்பட்டுள்ளன. 14–வது ஊதிய ஒப்பந்தம், 01.09.2019–ஆம் நாள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 15–வது ஊதிய ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தையை தொடங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**2.12.2 இதர நல நடவடிக்கைகள்:–**

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனை உறுதி செய்வதற்காக, பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன:–

1. பணிக்கால அடிப்படையிலான சிறப்பு ஊதிய சம்பள உயர்வு / ஆய்வு பலன்கள்

2. ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு வழங்கப்படும் தினப்படி.
3. 12(3)–வது ஊதிய ஒப்பந்தத்தின் கீழ் வரும் தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் மேற்பார்வை பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை
4. போனஸ், பொங்கல் ஊக்கத்தொகை
5. விடுப்பு பலன்கள்
6. திருப்பான் படி (Steering Allowance)
7. சலுகைக் கட்டண உணவக வசதி மற்றும் தீபாவளி பண்டிகைக்கு இனிப்புகள் வழங்குதல்.
8. இலவச சீருடைகள் மற்றும் சலவைப்படி
9. பணியாளர்களின் வாரிசுதாரர்களின் திருமண முன்பணம்.
10. வழக்குக் கட்டணம் ஈடு செய்தல்.
11. உரிமம் புதுப்பிப்பதற்கான கட்டணத்தை ஈடு செய்தல்.
12. இறந்த பணியாளர்களின் குடும்பத்திற்கு இறுதிச் சடங்குச் செலவுகள் ரூ.3,000/–.
13. பணியாளர்களின் குழந்தைகள் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு சென்றுவரக் கட்டணமில்லா பயண அனுமதிச்சீட்டு.
14. இறந்த பணியாளர்களின் குடும்ப நல நிதி ரூ.5,00,000/–

15. கொடைக்கானல், குற்றாலம் மற்றும் கன்னியாகுமரியில் விடுமுறை விடுதி வசதிகள்.
16. வழக்கமான மருத்துவ பரிசோதனை
17. ஓட்டுநர்களுக்கான இலவச கண்பரிசோதனை
18. பணியிலுள்ள பணியாளர்களுக்கு புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.
19. ஒரு வருடத்திற்கு 5500 கி.மீ வரை பயணம் செய்ய பணியாளர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இலவச பயண அட்டை வழங்குதல்
20. பண்டிகை முன்பணம் ஒரு வருடத்திற்கு ரூ.10,000/-
21. 31.03.2003-க்கு முன்னர் பணியில் சேர்ந்தவர்களுக்கு ஓய்வூதிய திட்டம் 1998 நடைமுறையில் உள்ளது. 31.05.2024 அன்றுள்ளவாறு, மொத்தம் 92,274 ஓய்வூதியதாரர்கள் உள்ளனர்.
22. பணிமனைகள் மற்றும் முக்கிய பேருந்து நிலையங்களில் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்கி ஓய்வெடுக்க ஓய்வு அறைகள்.
23. மன அழுத்தத்திலிருந்து விடுபடவும், மனநலம் பெறவும் யோகா மற்றும் சிறப்பு பயிற்சி வகுப்புகள்.

24. இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பணியாளர்களுக்காக சிறப்பு பேருந்துகள் இயக்கம்.
25. அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசு பொறியியல் கல்லூரி, அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் இட ஒதுக்கீடு.
26. அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஒவ்வொரு பணிமனையின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 10–ஆம் மற்றும் 12–ஆம் வகுப்பு பள்ளி இறுதி தேர்வில் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவ / மாணவியருக்கு முறையே ரூ.1500/–, ரூ.1000/– மற்றும் ரூ.500/– பரிசுத் தொகை வழங்குதல்.

**2.12.3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி**.

பணியாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் இதர வழங்கல் சட்டம், 1952–ன்கீழ் இருந்த அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களை 1998–ஆம் ஆண்டு ஓய்வூதிய திட்டத்தின்கீழ்

அறிமுகப்படுத்தப்பட்டு கொண்டுவரப்பட்டனர். அதன்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்களுக்கும் தனி ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக, 01.09.1998 முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சி உருவாக்கப்பட்டது. இவ்ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உள்ள தகுதியுள்ள ஓய்வுபெற்ற / விருப்பார்ந்த ஓய்வுபெற்ற / காலமான ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தை சரிபார்த்து, மாதாந்திர ஓய்வூதியத்தை வழங்குவதே இதன் முக்கிய பங்காகும். மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படுவதைத் தவிர, சரிபார்ப்பு மற்றும் ஓய்வூதியக் கொடுப்பாணை வழங்குதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு, ஓய்வூதியம் பெறுவோரின் குறைகளுக்கு தகுந்த பதில்கள் அளிக்கப்படுவது போன்றவை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் ஓய்வூதிய நிதி பொறுப்பாட்சியின் முக்கிய செயல்பாடாகும். 01.09.1998 அன்று சம்பளப்

பட்டியலில் இருந்த பணியாளர்கள் மற்றும் 31.03.2003 அன்று அல்லது அதற்கு முன் பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் இந்த 1998–ஆம் ஆண்டு ஓய்வூதிய திட்டத்தின்கீழ் மொத்தம் 1.28 லட்சம் பணியாளர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர். 2023–2024–ஆம் நிதியாண்டில், 91,590 ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதிய தொகையாக (Pension) ரூ.1,457.32 கோடி வழங்கப்பட்டுள்ளது. இவ்ஓய்வூதிய திட்டத்தின்கீழ் வரும் ஓய்வூதியதாரர்களின் சராசரி மாத ஓய்வூதியம் ரூ.121.44 கோடி ஆகும்.

### 2.12.4 சட்டரீதியான ஓய்வூதியப் பணப்பலன்களை வழங்குதல்

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு சேமநல நிதி, பணிக்கொடை, விடுப்பு ஒப்படைப்பு ஊதியம், ஓய்வூதிய ஒப்பளிப்பு மற்றும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம் போன்ற சட்டரீதியான ஓய்வூதிய பணப் பலன்களை வழங்குவதற்கான நிதி ஆதாரம் போதுமானதாக இல்லை. இதன் விளைவாக, அரசு போக்குவரத்துக்

கழகங்களுக்கு பங்கு மூலதன உதவி, குறுகிய கால கடன்கள் மற்றும் வழிவகை முன்பணம் ஆகியவற்றின் மூலமாக மேற்காணும் சட்டரீதியான ஓய்வூதிய பணப்பலன்களை வழங்கும் பொருட்டு, தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருகின்றது. மே 2020 முதல் நவம்பர் 2022 வரை ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கும், மார்ச் 2023 வரை 210 இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்கள் உள்பட 6,718 நபர்களுக்கு ரூபாய் 1,615.27 கோடி ஓய்வூதிய பணப் பலன்களாக வழங்கப்பட்டுள்ளன.

**2.13 விபத்து இழப்பீட்டுத் தீர்வு நிதியம்**

தனியார் மற்றும் வணிக வாகனங்களைப் போல தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் வாகன காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படவில்லை. வாகன விபத்துகளால் பாதிக்கப்படுபவர்கள் மாண்பமை நீதிமன்றங்களின் மூலம் விபத்து இழப்பீடு பெற வழக்கு தொடர்ந்து, நிவாரணம் பெறுவதற்கு கால அவகாசம் ஏற்படுகிறது.

எனினும், அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்தில் காயமடைந்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும், விரைவாக விபத்து இழப்பீட்டை வழங்கும் பொருட்டு, 2010–2011–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டிற்கும் முறையே அரசின் பங்காக ரூ.20 கோடியும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்காக ரூ.20 கோடியும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.40 கோடியில் தனியாக ஒரு விபத்து இழப்பீட்டுத் தீர்வு நிதியம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இத்தொகை ரூ.60 கோடியாக உயர்த்தப்பட்டு, இதில், அரசின் பங்களிப்பாக ரூ.30 கோடியும், அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்பாக ரூ.30 கோடியுமாக உள்ளது. மேற்படி நிதியம், சென்னையிலுள்ள தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

விபத்தினை தடுக்கும் நடவடிக்கையினை ஆதரிக்கும் பொருட்டு, இழப்பீடு வழங்கவும், சுங்க கட்டணத்தை செலுத்தவும் 20.01.2018 முதல் பேருந்து பயணிகளிடம் தீர்வை (Cess) வசூல் செய்யும் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கென தமிழ்நாடு மாநில போக்குவரத்துக் கழக விபத்து இழப்பீடு மற்றும் சுங்கக் கட்டணத்திற்கான நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வைக் கட்டணம் பின்வருமாறு:–

(ரூபாயில்)

| வ. எண். | பயண கட்டண விலை | பயணிகளிடமிருந்து பெறப்படும் தீர்வை | |
|---|---|---|---|
| | | நகர் | புறநகர் |
| 1. | ரூ.25 வரை | 1 | 1 |
| 2. | ரூ.26 முதல் ரூ.50 வரை | 1 | 2 |
| 3. | ரூ.51 முதல் ரூ.75 வரை | 1 | 3 |
| 4. | ரூ.76 முதல் ரூ.100 வரை | 1 | 4 |
| 5. | ரூ.101 முதல் ரூ.200 வரை | _ | 5 |
| 6. | ரூ.201 முதல் ரூ.300 வரை | _ | 6 |
| 7. | ரூ.301 முதல் ரூ.400 வரை | _ | 7 |
| 8. | ரூ.401 முதல் ரூ.500 வரை | _ | 8 |
| 9. | ரூ.501 –க்கு மேல் | _ | 10 |

20.01.2018 முதல் 15.05.2024 வரை ரூ.2,911.10 கோடி தீர்வையாக வசூலிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ரூ.1,087.29 கோடி சுங்கக் கட்டணத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவின்படி, 16,964 வழக்குகள் மூலம் ரூ.893.23 கோடியும், மக்கள் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு செய்யப்பட்ட 6,230 வழக்குகள் மூலம் ரூ.401.36 கோடியும் ஆக மொத்தம் விபத்து இழப்பீடு கோரிய 23,194 வழக்குகளில் விபத்து இழப்பீட்டுத் தொகையாக ரூ.1294.59 கோடி விபத்து இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

**2.14 தேசிய அளவில் விருதுகள்**

18.04.2023 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய சாலைப் பாதுகாப்பு விழாவின் போது, இந்தியாவில் மாநில சாலைப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த 42 ஓட்டுநர்களை இந்தியாவின் சாதனையாளர்களில், சிறந்த ஓட்டுநர்களாக மத்திய அரசு அங்கீகரித்துப் பாராட்டியுள்ளது. இந்த பாராட்டுக்குரிய நபர்களில், தமிழ்நாடு அரசுப்

போக்குவரத்து கழகங்களைச் சேர்ந்த 14 ஓட்டுநர்கள் "சாலை நாயகர்கள்" என்று கௌரவிக்கப்பட்டனர், இவ்விருது பெற்றவர்களில் 33.33 சதவீதத்தினர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த ஓட்டுநர்கள் ஆவர்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் எரிபொருள் திறன், சாலைப் பாதுகாப்பு மற்றும் ஒட்டுமொத்த செயல்திறனிலும் குறிப்பிடத்தக்க சாதனைகளுக்காக தகுதியான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. 2022-2023-ஆம் ஆண்டிற்கான 69 தேசிய பொது பேருந்து போக்குவரத்து சிறப்பு விருதுகளில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் 17 விருதுகளை பெற்றுள்ளன. மதிப்புமிக்க இவ்விருதுகளை அனைத்து மாநில சாலை போக்குவரத்துக் கழகங்களின் கூட்டமைப்பு (ASRTU) 15.03.2024 அன்று புதுடெல்லியில் வழங்கியது. அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்)

லிமிடெட், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் மற்றும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட் ஆகியவை இந்த விருதுகளைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் முதலிடங்களில் 24 சதவீதமும், இரண்டாம் இடங்களில் 26 சதவீதமும் ஆகமொத்தம் 25 சதவீத இடங்களை பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## 2.15 அரசு போக்குவரத்துக் கழகங்களின் முக்கிய அம்சங்கள்

### 2.15.1 மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட், சென்னை

மாநகர் போக்குவரத்துக் கழகம் சென்னை பெருநகரில் பொதுப் போக்குவரத்து சேவைகளை கொடுக்கும் முதன்மை தனியுரிமை நிறுவனமாகும். இக்கழகம் சென்னை மற்றும் அதன் அருகில் உள்ள காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலும் நகரப் பேருந்துகளை இயக்குகிறது.

- ✓ 31.03.2024 அன்றுள்ளவாறு இப்போக்குவரத்துக் கழகம் 32 பணிமனைகளையும், 3,347 பேருந்துகளை கொண்டு 3,233 சேவைகளை 672 வழித்தடங்களில் ஒவ்வொரு நாளும் இயக்கி வருகிறது. இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 19,415 ஆகும். இக்கழகம் சாதாரண பேருந்து, விரைவு பேருந்து, சொகுசு பேருந்து, குளிர்சாதன பேருந்து போன்ற சேவை வரம்புகளைக் கொண்டுள்ளது.
- ✓ இக்கழகத்தின் ஒரு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு குரோம்பேட்டையில் அமைந்துள்ளது.
- ✓ இக்கழகம் இரண்டு புதுப்பித்தல் பிரிவு, எட்டு தகுதிச்சான்று பிரிவு, ஒரு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் நான்கு பயிற்சி மையம், இரண்டு உருளிப்பட்டை புதுப்பித்தல் பிரிவு மற்றும் ஒரு ஏலப்பிரிவு ஆகியவற்றை கொண்டு இயங்கி வருகிறது.

**2.15.2 அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு லிமிடெட், சென்னை**

- ✓ அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 300 கி.மீட்டருக்கு மேற்பட்ட நீண்டதூர பயணமாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும், வழிபாட்டுத் தலங்களையும், வர்த்தக

இடங்களையும் இணைக்கும் பொருட்டும், அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களை இணைக்கும் பொருட்டும் பேருந்துகளை இயக்கி வருகிறது. இக்கழகம் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

- ✓ இக்கழகத்தில் 22 பணிமனைகள் அமைந்துள்ளன. 31.03.2024 அன்றுள்ளவாறு, மொத்தம் 1,073 பேருந்துகள் உள்ளன.

- ✓ இக்கழகம் தமிழ்நாட்டுடன் அண்டை மாநிலங்களை இணைக்கும் விதமாக 188 வழித்தடங்களை இயக்கி வருகிறது. அதில் அண்டை மாநிலங்களுக்கு 95 வழித்தடங்களும், தமிழ்நாட்டின் உட்பகுதிகளுக்கு 93 வழித்தடங்களும் இயக்கப்படுகின்றன.

- ✓ இக்கழகத்தில் 31.03.2024 அன்றுள்ளவாறு, மொத்தம் 4,661 பணியாளர்கள் பணியில் உள்ளனர்.

- ✓ அதிநவீன மிதவை பேருந்து, குளிர்சாதன பேருந்து, குளிர்சாதன படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதன படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா

படுக்கை வசதி கொண்ட பேருந்து, குளிர்சாதனமில்லா படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்துகள் இக்கழகத்தின் மூலம் இயக்கப்படுகின்றன.

- ✓ இக்கழகம் இரண்டு புதுப்பித்தல் பிரிவு, ஒரு உருளிப்பட்டை புதுப்பித்தல் பிரிவு, ஐந்து தகுதிச்சான்று பிரிவு, ஒரு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் நான்கு பயிற்சி மையங்கள் மற்றும் ஒரு ஏலப்பிரிவு மையங்களை கொண்டு இயங்கி வருகிறது.

- ✓ இந்திய இரயில்வே மற்றும் விமானத் துறையை போன்று இணையதளம் மூலமாக 60 நாட்களுக்கு முன்பாக இணையதளம் மற்றும் கைபேசி செயலி மூலம் மின்னணு முன்பதிவு செய்யும் வசதி (E–Ticketing) பயணிகளுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

- ✓ தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம், கேரளா, புதுச்சேரி மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் 61 இடங்களில் 64 மையங்களுடன் இணையவழி பயணச்சீட்டு முன்பதிவு அமைப்பு (OTRS) உள்ளது.

- ✓ இக்கழகத்தால் இயக்கப்படும் ஒருவழித் தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத இடத்தில் முன்பதிவு செய்யும் பயணிகளின் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர்முனையிலும் இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

- ✓ பயணிகளுக்கு அனைத்து வகையான முன்பதிவுகளின் மூலமாக அனைத்து வகை பேருந்துகளிலும் இருவழி பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யும் போது 10% கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. இச்சலுகையானது பண்டிகை, முகூர்த்த நாட்கள், வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய நாட்களுக்கு பொருந்தாது.

- ✓ பேருந்துகளில் தனியாக பயணம் செய்யும் பெண்களின் பாதுகாப்பிற்கென தற்போது நான்கு தனி இருக்கைகள் ஒதுக்கப்பட்டு முன்பதிவு செய்து பயணம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இருக்கைகள் பேருந்து புறப்படும் 24 மணி நேரம் முன்பு வரை பெண்களுக்காக மட்டுமே முன்பதிவு செய்யப்பட்டு பயணிக்க இயலும்.

- ✓ வேலையில்லா இளைஞர்கள் சுயதொழில் செய்து முன்னேறும் வகையில் இக்கழகத்தின் மூலமாக இயக்கப்படும் பேருந்துகளில் குறைந்த கட்டண அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 6,000/– மட்டும் செலுத்தி ஒரு பேருந்தின் சுமை பெட்டியை வாடகைக்கு எடுத்துக்கொள்ளலாம். இதன் மூலம் அத்திட்டத்தின் இரு முனைகளிலும் சுமை பெட்டியை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அரசின் இத்திட்டத்தின் மூலம் சுய தொழில் முன்னேறுவதோடு ஒரு மாவட்டத்தில் விளையும் பொருட்கள் அல்லது உற்பத்தி செய்யும் பொருட்கள் பிற மாவட்டங்களுக்கு அனுப்புவதன் மூலம் வணிகமும் மேம்பாடு அடையும். இந்த திட்டத்திற்கான சலுகை ஒரு வருட காலத்திற்கு மட்டுமே அளிக்கப்படும்.

- ✓ பேருந்துகளில் முன்பதிவு செய்து தொடர்ந்து பயணிக்கும் பயணிகளுக்கான சிறப்பு சலுகையாக ஒரு மாதத்தில் ஐந்து முறைக்கு மேல் முன்பதிவு செய்து பயணிக்கும்போது அதே மாதத்தில் அதே வழித்தடத்தில் அடுத்து பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்யும் ஒவ்வொரு பயணத்திற்கும் 50 சதவீத பயண கட்டணச் சலுகை அளிக்கப்படும்.

இச்சலுகை அனைத்து வகைப் பேருந்துகளிலும் பொருந்தும். அடிக்கடி பயணம் மேற்கொள்வோருக்கு கூடுதல் பயனளிக்கும் நோக்கமாக இச்சலுகை அளிக்கப்படுகிறது.

- ✓ குறைந்த நிறுத்தங்கள் மற்றும் விரைவான சேவையினை நேரடியாக பயணிகளுக்கு வழங்குவதற்காக முக்கிய இடங்களுக்கு குறிப்பிட்ட அடையாள பெயர்களுடன் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. முன்பதிவு செய்த பயணிகளின் நன்மைக்காக நியமிக்கப்பட்ட இடங்களில் ஏறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ்வசதி கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில் போன்ற முக்கிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

- ✓ தீபாவளி, பொங்கல் போன்ற முக்கிய பண்டிகைகளின் போது, பொது மக்களின் பயணத்தை எளிதாக்கும் வகையில், சென்னை மாநகரப் பகுதிகளை சுற்றியுள்ள ஐந்து பேருந்து நிலையங்களிலிருந்தும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பண்டிகை காலங்களில், அனைத்து தரப்பு மக்களும் நகரப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலின்றியும் மிகுந்த பயண

நேரத்தை தவிர்த்து எளிதாக பயணம் செய்ய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

- ✓ முன்பதிவு செய்து பயணம் செய்யும் பயணிகளுக்கு பேருந்தின் பதிவு எண், நடத்துநரின் பெயர் மற்றும் கைபேசி எண் விவரங்கள் குறுஞ்செய்தியாக பயண நேரத்திற்கு 30 நிமிடங்கள் முன்னதாக, முன்பதிவின் போது பயணி அளித்த கைபேசி எண்ணிற்கு அனுப்பப்படும். மேலும், அனைத்து பேருந்துகளிலும் புவித்திசைக்காட்டி (GPS) கருவி பொருத்தப்பட்டு, இக்கருவியின் தொழில்நுட்பத்தின் வாயிலாக முன்பதிவு செய்த பயணிகளுக்கு பேருந்து வந்து கொண்டிருக்கும் நிகழ்விடம் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது பயணிகளுக்கு தடையற்ற மற்றும் தகவலறிந்த பயண அனுபவத்தை உறுதி செய்கிறது.

- ✓ இக்கழகம், Whatsapp கைப்பேசி எண்" மூலம் பயணிகளின் புகாரினை பெற்று அவர்களின் குறைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வருவதன் மூலம் இம்முயற்சி பயணிகளிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

- ✓ சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் நாகர்கோவில் ஆகிய நான்கு இடங்களில் அதிநவீன பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலம் விபத்தில்லா இயக்கம், எரிபொருள் சிக்கனம், புதிய தொழில்நுட்ப மேம்பாடு, பராமரிப்பு நடைமுறைகள் மற்றும் மன அழுத்த மேளாண்மை ஆகியவற்றில் பல்வேறு துறைகளை சார்ந்த வல்லுநர்களை கொண்டு ஓட்டுநர், நடத்துனர் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- ✓ முன்பதிவு செய்யப்பட்ட பயணச்சீட்டுகளில் வழங்கப்படும் hyper link மூலம் பயணிகளின் குறைகள் உடனடியாக கவனிக்கப்பட்டு, நிவர்த்தி செய்யப்பட்ட விவரம் பயணிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது.

### 2.15.3 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் செயல்படும் மண்டல

அலுவலகங்கள் வாயிலாக நகர், புறநகர் மற்றும் மலைப் பகுதிகளில் பேருந்து இயக்கங்களை மேற்பார்வையிடுகிறது.

- ✓ இக்கழகத்தில் தற்போது 57 பணிமனைகள் உள்ளன. மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 3,337 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 3,020 ஆகும். புறநகரப் பேருந்துகளில் சாதாரண, விரைவு, சொகுசு, அதிநவீன சொகுசு, இடைநில்லா மற்றும் 3x2 இருக்கை கொண்ட குளிர்சாதன பேருந்து போன்ற பல்வேறு வகையான பேருந்துகளை இயக்கி வருகின்றது.
- ✓ 31.03.2024 அன்றுள்ளவாறு, இக்கழகத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 19,061.
- ✓ இப்போக்குவரத்துக் கழகம் கீழ்க்காணும் பிரிவுகளை கொண்டு இயங்கி வருகிறது. புதுப்பித்தல் பிரிவு–3, உருளிப்பட்டை புதுப்பித்தல்–3, பேருந்து கூண்டு கட்டும் பிரிவு–3, தகுதிச்சான்று பிரிவு–9, ஓட்டுநர் பயிற்சி பள்ளி–6, தொழிற்பயிற்சி பள்ளி–1, ஏலப்பிரிவு–3 மற்றும் பயிற்சி மையம்–6.
- ✓ இக்கழகம், பொது மக்கள் மற்றும் பக்தர்கள் வசதிக்காக பிரதி அமாவாசை (மேல்மலையனூர்)

மற்றும் பௌர்ணமி (திருவண்ணாமலை), ஆடிக்கிருத்திகை (திருத்தணி), தைப்பூசம் (வடலூர்), கூவாகம், சித்திரை பௌர்ணமி, கார்த்திகை தீபம், பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய திருவிழா மற்றும் முக்கிய நாட்களில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

- ✓ தொலைதூர மற்றும் நேரிடை பயணிகளின் வசதியினை கருத்திற்கொண்டு நடத்துநர் இல்லா மற்றும் இடைநில்லா பேருந்துகள் விழுப்புரம், புதுச்சேரி, கள்ளக்குறிச்சி, கடலூர், விருதாச்சலம், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய எட்டு வழித்தடங்களில் இருந்து சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றன. தொடக்கத்தில் இயக்கப்பட்ட 30 எண்ணிக்கையிலான பேருந்துகளுக்கு பொது மக்களிடையே கிடைக்கப் பெற்ற நல்ல வரவேற்பினை தொடர்ந்து, தற்போது 102 பேருந்துகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### 2.15.4 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், சேலம்.

- ✓ இக்கழகம் சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் (சிறு பகுதி) ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய

நியமிக்கப்பட்ட பகுதிகளுக்கு பேருந்து சேவையை வழங்கி வருகிறது. சேலம் மண்டலம் மற்றும் தருமபுரி மண்டலம் என இரண்டு மண்டலங்களாக செயல்படுகிறது.

| மண்டலம் | பணிமனைகளின் எண்ணிக்கை | வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை | பணியாளர்களின் எண்ணிக்கை | நாள்தோறும் சராசரியாக இயக்கப்படும் தூரம் கி.மீ. |
|---|---|---|---|---|
| சேலம் | 18 | 1,047 | 5,868 | 4,85,143 |
| தருமபுரி | 14 | 853 | 5,256 | 4,29,354 |
| மொத்தம் | 32 | 1,900 | 11,124 | 9,14,497 |

- ✓ இப்போக்குவரத்துக் கழக இயக்க வரம்பில் சேலம் மாவட்டத்தில் உள்ள 629 கிராமங்களும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 449 கிராமங்களும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள 475 கிராமங்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 658 கிராமங்களும் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள 113 கிராமங்களும் உள்ளடக்கியது.

- ✓ இக்கழகம் இரண்டு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு, இரண்டு புதுப்பித்தல் பிரிவு, ஒரு உருளிப்பட்டை புதுப்பித்தல் பிரிவு, மூன்று தகுதிச்சான்று பிரிவு, நான்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி, நான்கு பயிற்சி மையம் மற்றும் இரண்டு

ஏலப்பிரிவு ஆகிய பிரிவுகளை கொண்டு இயங்கி வருகிறது.

- ✓ இப்போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதிக்காக கீழ்க்கண்ட சுற்றுலா தலங்களுக்கும் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கும் கூடுதல் வசதிகளை செய்து வருவதை உறுதி செய்கிறது.

- ✓ வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய பண்டிகை நாட்களில், ஏற்காடு மலை, கொல்லிமலை, ஒகேனக்கல் காவேரி ஆற்று நீர்வீழ்ச்சி மற்றும் மேட்டூர் அணை போன்ற சுற்றுலா தலங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகிறது.

- ✓ பண்டிகை நாட்களில் சிவாலயங்கள் அமைந்துள்ள மாதேஸ்வரன் மலை, சிவன் கோயிலுள்ள தாரமங்கலம், திருச்செங்கோடு, பேளூர் மற்றும் அறகலூர் பகுதிகளுக்கும், முருகன் திருக்கோயில்கள் அமைந்துள்ள காளிப்பட்டி, கபிலர்மலை, புத்திரகவுண்டம்பாளையம் (146 அடி உயரம் முத்துமலை முருகன் சிலை) மற்றும் நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் ஆகிய வழிபாட்டுத் தலங்களுக்கும் சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது.

## 2.15.5 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பேருந்துகளை இயக்கி வருகிறது. மேலும், அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகாவிற்கும் நீட்டித்து பேருந்துகளை இயக்கி வருகிறது. இப்போக்குவரத்துக் கழகம் நகர், புறநகர் மற்றும் மலைப் பகுதி பேருந்துகளை இயக்கி வருகின்றது.

31.03.2024 அன்றுள்ளவாறு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட்டில் கட்டமைப்புகள், பேருந்துகள் மற்றும் பணியாளர்கள் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பொருள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மண்டலங்கள் | 4 |
| 2 | பணிமனைகள் | 43 |
| 3 | தொழிற்கூடங்கள் | 2 |
| 4 | ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் | 2 |
| 5 | பேருந்துகள் | 2,843 |
| 6 | பணியாளர்கள் | 15,254 |

- ✓ இக்கழகம் இரண்டு உருளிப்பட்டை புதுப்பித்தல் பிரிவு, மூன்று பேருந்து கூண்டு கட்டும் பிரிவு, ஐந்து தகுதிச்சான்று பிரிவு, நான்கு ஓட்டுநர் பயிற்சி பள்ளி மற்றும் இரண்டு ஏலப்பிரிவுகளை கொண்டு இயங்கி வருகிறது.
- ✓ இக்கழகத்தின் மூலம் வால்பாறை, உதகமண்டலம் மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் கட்டடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.
- ✓ கூடுதலாக, இக்கழகம் பர்லியார் மற்றும் ஆசனூரில் பேருந்து பயணிகளின் வசதிக்காக சாலையோர சிற்றுண்டி விடுதிகளை பராமரித்து வருகிறது.

### 2.15.6 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, காரைக்குடி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது.

- ✓ 31.03.2024 அன்றுள்ளவாறு, இக்கழகத்தில் மொத்த பணிமனைகளின் எண்ணிக்கை 61,

பேருந்துகளின் எண்ணிக்கை 3,496 மற்றும் 3,184 வரையறுக்கப்பட்ட சேவைகளை இயக்கி வருகிறது. இக்கழகத்தின் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 18,790 ஆகும்.

- ✓ இக்கழகம் சாதாரண, விரைவு, அதிநவீன சொகுசு மற்றும் 3x2 இருக்கை கொண்ட குளிரூட்டப்பட்ட பேருந்துகளை இயக்கி வருகிறது.

- ✓ பொறையார், கரூர் (மண்மங்கலம்), காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகளை கொண்டுள்ளது. மேலும், கும்பகோணம், திருச்சி, தேவகோட்டை மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதுப்பிக்கும் பிரிவு மற்றும் உருளிப்பட்டை பிரிவினையும் கொண்டு இயங்கி வருகின்றது.

- ✓ இக்கழகம் ஒன்பது தகுதிச்சான்று பிரிவு, ஏழு ஓட்டுநர் பயிற்சி பள்ளி, ஆறு பயிற்சி மையங்கள் மற்றும் நான்கு ஏலப்பிரிவு ஆகியவற்றை கொண்டு இயங்கி வருகிறது.

- ✓ இக்கழகம் 11 மாவட்டங்களிலும் மற்றும் மாநிலங்களுக்கிடையிலான காரைக்கால்

உள்ளடக்கிய புதுச்சேரி யூனியன் பிரதேச பகுதிகளை இயக்க எல்லையாகக்கொண்டு பேருந்துகளை இயக்கி வருகிறது. மேலும், உலக புகழ்பெற்ற வேளாங்கண்ணி திருத்தலம், உலக புராதனச் சின்னமான தஞ்சை பெருவுடையார் கோயில் மற்றும் திருவரங்கம் கோயில், நவக்கிரக கோயில்கள் மற்றும் சமயபுரம் கோயில் ஆகிய முக்கிய வழிபாட்டு தலங்களும் இப்போக்குவரத்துக் கழகத்தின் இயக்க பகுதியில் அமைந்துள்ளன. மேலும், வழிபாட்டு தலங்களுக்கு புனித நாட்களில் சிறப்பு பேருந்துகளை இயக்குகிறது. இக்கழகம் விழாக் காலங்களில் இதர புனித தலங்களான பழனி, தாயமங்கலம், நாகூர் மற்றும் ஏர்வாடி தர்கா போன்ற இடங்களுக்கும் சிறப்பு பேருந்து வசதிகளை வழங்கி வருகிறது.

### 2.15.7 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், மதுரை.

- ✓ மதுரை, திண்டுக்கல் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு நகர், புறநகர் மற்றும் மலைப்பகுதிகளில் பேருந்து சேவையை இயக்கி வருகின்றது.

- ✓ இக்கழகத்தில் உள்ள பணிமனைகளின் எண்ணிக்கை 40 ஆகும். இக்கழகத்தில் உள்ள மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 2,390 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 2,171 ஆகும்.
- ✓ இக்கழகத்தில் உள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 13,184 ஆகும். இக்கழகம் சாதாரணப் பேருந்து, விரைவுப் பேருந்து மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகின்றது.
- ✓ இக்கழகத்தில் மதுரை, வத்தலக்குண்டு மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவுகள் உள்ளன.
- ✓ இக்கழகம் மூன்று புதுப்பித்தல் பிரிவு, ஐந்து தகுதிச்சான்று பிரிவு, மூன்று உருளிப்பட்டை புதுப்பித்தல் பிரிவு, மூன்று ஓட்டுநர் பயிற்சி பள்ளி, நான்கு பயிற்சி மையங்கள் மற்றும் இரண்டு ஏலப்பிரிவு ஆகியவற்றை கொண்டு இயங்கி வருகிறது.
- ✓ உயிரிழப்பு விபத்து ஏற்படுத்திய கழக மற்றும் தனியார் ஓட்டுநர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஓட்டுதல் ஒத்த

கருவி மூலம் சிறந்த ஓட்டுநர் பயிற்சி இக்கழகத்தின் பயிற்சி மையத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

- ✓ திருவிழா காலங்களில், பல்வேறு இடங்களுக்கான போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. (1) வீரபாண்டி, (2) இருக்கன்குடி, (3) வேளாங்கண்ணி (4) பழனி, (5) சபரிமலை ஐயப்பன் கோயில் (குமுளி வரை), (6) அழகர்கோயில், (7) திருச்செந்தூர் கோயில், (8) மாசாணியம்மன் கோயில், (9) திருவண்ணாமலை கிரிவலம் மற்றும் (10) திருப்பரங்குன்றம் கோயில்.
- ✓ வெளி மாநிலங்களிலிருந்து வரும் பக்தர்களின் பேருந்துகள் மற்றும் சிற்றுந்துகள் போக்குவரத்து நெரிசல் காரணமாக கோயிலுக்கு அருகில் அனுமதிக்கப்படாததால், மீனாட்சி அம்மனை வழிபட வரும் பக்தர்களின் வசதிக்காக நான்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.
- ✓ கோடைக்காலத்தை முன்னிட்டு பயணிகளின் வசதியினை கருத்திற்கொண்டு, ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் முழுவதும் முன்பதிவு வசதியுடன்

கொடைக்கானலை சுற்றியுள்ள இயற்கை எழில்மிகு 12 இடங்களுக்கான சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**2.15.8 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், திருநெல்வேலி**

✓ போக்குவரத்து சேவையை கண்காணித்து மேம்படுத்த, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

✓ 31.03.2024 அன்றுள்ளவாறு இக்கழகத்தில் மொத்தம் 30 பணிமனைகள் உள்ளன. இக்கழகத்தின் மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 1,720 மற்றும் வரையறுக்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 1,661 ஆகும். இக்கழகத்தில் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 9,530 ஆகும்.

✓ இப்போக்குவரத்துக் கழகம் நகர் மற்றும் புறநகர் பேருந்துகளை இயக்கி வருகின்றது.

✓ இக்கழகம், சாதாரண, விரைவு, அதிநவீன சொகுசு மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்கி வருகிறது.

- ✓ இக்கழகம் இரண்டு பேருந்து கூண்டு கட்டும் பிரிவு, இரண்டு புதுப்பித்தல் பிரிவு, இரண்டு தகுதிச்சான்று பிரிவு, இரண்டு உருளிப்பட்டை புதுப்பித்தல் பிரிவு, இரண்டு ஓட்டுநர் பயிற்சி பள்ளி, இரண்டு பயிற்சி மையங்கள் மற்றும் இரண்டு ஏலப்பிரிவு ஆகியவற்றை கொண்டு இயங்கி வருகிறது.
- ✓ ஓட்டுநர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, பயிற்சி மையம் கன்னியாகுமரியிலுள்ள இராணித் தோட்டத்தில் கட்டடப்பட்டுள்ளது.
- ✓ இக்கழகம், திருச்செந்தூர், சங்கரன்கோவில், பாபநாசம், ஸ்ரீவில்லிபுத்தூர், உவரி, கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் போன்ற முக்கிய வழிபாட்டு தலங்கள் மற்றும் சுற்றுலா மையங்களுக்கு பேருந்துகளை இயக்கி வருகிறது.
- ✓ புனித யாத்திரை செல்லும் மக்களின் நலன் கருதி நவகைலாயம், நவதிருப்பதி மற்றும் பஞ்சபூத தலங்களுக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

## 3. பேருந்து போக்குவரத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள்

பேருந்து போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக அரசு போக்குவரத்துக் கழகங்களால் எடுக்கப்பட்ட முயற்சிகளில் பேருந்து சேவைகளை நவீனமயமாக்குதல், தகவல் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்துதல், தகவல் தொழில்நுட்பம் சேவையை செய்வதுடன் நுண்ணறிவு போக்குவரத்து சேவைகள் வழங்குதல், மின்–ஆளுமையை செயல்படுத்துதல் போன்றவை முக்கியமானதாகும். மேலும், இடைநில்லா பேருந்து சேவைகளை அதிகரித்து வருவாயினை ஈட்டுவதற்கான புதிய வாய்ப்புகளை ஆராய்வதும் முக்கியமானதாகும்.

### 3.1 சர்வதேச நிதி ஆதரவு திட்டங்கள்

**i) தமிழகத்திலுள்ள நகரங்களில் KfW நிதியுதவியுடன் சுற்றுச் சூழலுக்கு உகந்த நவீன பேருந்து சேவைகளுக்கான தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் நுண்ணறிவு போக்குவரத்து அமைப்புகளுடன் BS–VI**

**இணக்கமான டீசல் பேருந்துகள் மற்றும் மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்தல்.**

ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) உதவியுடன் ஏறத்தாழ 12,000 பேருந்துகளில் 10,000 BS–VI டீசல் பேருந்துகள், 2,000 மின்சாரப் பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கு அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. அதன்படி, 2021–ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளில் 80% (KfW) வட்டியில்லா கடனாகவும், 20% தமிழ்நாடு அரசு பங்கு என்ற விகிதத்தில் செலவின பகிர்வு என்ற அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதிய டீசல் பேருந்துகள் ஏழு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் (அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தவிர) மின்சாரப் பேருந்துகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக இயக்கப்படும். முதற்கட்டமாக 2,166 டீசல் பேருந்துகளும் மற்றும் 100 மின்சாரப் பேருந்துகளும் ரூபாய் 2,380 கோடி திட்ட மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படவுள்ளன.

இரண்டாம் கட்டமாக கூடுதலாக 400 மின்சார பேருந்துகள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. அரசு போக்குவரத்து கழகங்களுக்கென தகவல் தொழில்நுட்ப மென்பொருட்கள் மற்றும் வன்பொருட்களை மேம்படுத்துவது, பயணிகள் தகவல் அமைப்பு, ரொக்கமில்லா பரிவர்த்தனை முறை, இயக்க மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த மென்பொருள் தீர்வு போன்றவை இதன் இதர முக்கிய முதலீட்டுக் கூறுகளாகும்.

தற்போது, 552 தாழ்தளப் பேருந்துகளுக்கு கூண்டுகள் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கான பணி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது. இந்த முயற்சிகள் தமிழ்நாட்டில் பொதுப் போக்குவரத்தின் தரம் மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல், தனியர் போக்குவரத்து முறைகளுடன் தொடர்புடைய எதிர்மறையான செயல்பாடுகளை நிவர்த்தி செய்தல் மற்றும் நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து

முறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**ii) JICA உதவியுடன் சென்னையில் நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு**

மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளுக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மை அமைப்பிற்கான (ITMS) தீர்வு ஜப்பான் நிதியுதவி திட்டத்தின் (JICA) மூலம் கிடைக்கிறது. இவ்வமைப்பு, தானியங்கி வாகன இருப்பிடம் கண்டறியும் அமைப்பு, பயணிகள் தகவல் அமைப்பு, பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பணியாளர்களுக்கான செயலி / வலைதளங்களின் பயன்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். பணிமனைகளை நிர்வகிக்கும் முறை என்பது வாகன இயக்கம் தொடர்பான திட்டமிடல் மற்றும் அட்டவணைப்படுத்துதல், வாகனம் அனுப்புதல், பணியாளர்களின் வேலைமுறை பட்டியல், வருகை மேலாண்மை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்திற்கான, மொத்த

திட்டச் செலவு ரூ.136 கோடியாகும். இதில் ஜப்பான் நிதியுதவி பங்கு மூலம் 51 சதவீதம் மற்றும் மாநில அரசு பங்கு மூலம் 49 சதவீதம் ஆகும். சோதனை ஓட்டம் நிறைவடைந்த நிலையில், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காகவும், இயக்குவதற்காகவும் ஒரு கணினி ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சோதனை ஓட்டமாக ஏப்ரல் 2024–இல் மூன்று பணிமனைகளிலுள்ள 50 பேருந்துகளில் பயணிகள் தகவல் அமைப்பு 8 முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ளது. கூடுதலாக வருகை பதிவு இயந்திரம் 4 பணிமனைகளில் பொருத்தப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கான கைபேசி செயலி பயன்பாடு தற்போது 6 பணிமனைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**iii) உலக வங்கி நிதியுதவியுடன் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சேவையினை மேம்படுத்துவதற்கான திட்டம்**

இத்திட்டம், உலக வங்கி ஆதரவுடன் செயல்படுத்தப்படும் சென்னை நகர கூட்டாண்மை

திட்டத்தின் ஒரு பகுதியாகும். பொதுப் போக்குவரத்து சேவை ஒப்பந்தம் (PTSC) என அழைக்கப்படும் இந்த குறிப்பிட்ட கூறு, தமிழ்நாடு அரசு மற்றும் மாநகர் போக்குவரத்து கழகம் (சென்னை) லிமிடெட் இடையே ஒரு ஒப்பந்தத்தை உள்ளடக்கியது. இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் தற்போதுள்ள பேருந்துகளின் செயல்திறனை மேம்படுத்துவதும் வெளிப்படையான நிதியுதவியை உறுதி செய்வதும் ஆகும். நிதி வழங்கல் குறிப்பிட்ட குறிகாட்டிகளின் சாதனையுடன் இணைக்கப்படும். இது புதுமையான முறைகள் மூலம் புதிய பேருந்துகளை இயக்க உதவும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.959.4 கோடியாகும். இதில் 70 சதவீகிதம் உலக வங்கியும் 30 சதவீதம் தமிழ்நாடு அரசும் நிதியுதவி வழங்குகின்றன. இதற்கான செயற்திட்டம் முன்னரே தயாரிக்கப்பட்டு, அரசுக்கும் மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கும் இடையே பொது பேருந்து சேவை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு

சாத்தியமான இடைவெளி நிதியை (viability gap funding) அரசு வழங்குகிறது.

தொடக்கத்தில், மொத்த செலவு ஒப்பந்த (GCC) மாதிரி முறையில் 500 மின்சார பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும். மொத்த செலவு ஒப்பந்த (GCC) மாதிரி அடிப்படையில், 500 மின்சார பேருந்துகளின் கொள்முதல், விநியோகம், இயக்குதல் மற்றும் பராமரித்தல், அத்துடன் தொடர்புடைய மின்சாரம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றிற்காக ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது.

## 3.2 ஒன்றிய அரசின் உதவித் திட்டங்கள் பெண்கள் பாதுகாப்பான நகர் திட்டம்

பொது இடங்களில் குறிப்பாக பேருந்துகள், பேருந்து நிலையங்கள், பேருந்து பணிமனைகள் போன்ற பொதுப் போக்குவரத்து அமைப்புகளில் பெண்களுக்கு பாதுகாப்பான மற்றும் அதிகாரமளிக்கும் சூழலை உருவாக்குவதே பாதுகாப்பான நகர் திட்டமாகும். இத்திட்டம், நிர்பயா திட்டத்தின் ஒரு

பகுதியாகும். பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் துன்புறுத்தல்களுக்கு அஞ்சாமல் பெண்கள் பல்வேறு வாய்ப்புகளைத் தொடர அனுமதிக்கும் வகையில் இந்த முயற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பிற்காக, 2,500 பேருந்துகள், 66 பேருந்து முனையங்கள் / பணிமனைகளில் கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் அவசர அழைப்பு பொத்தான்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவசர அழைப்பு பொத்தானின் பயன்பாட்டினால் பேருந்துகளை கண்காணித்து, பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பொருட்டு, மாநகர் போக்குவரத்துக் கழக வளாகத்தில் ஒரு கட்டளைக் கட்டுப்பாட்டு மையம் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டம், ரூ.72.71 கோடி செலவில் ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் 60:40 என்ற விகிதாச்சார பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், 10.01.2023 முதல் முழு பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

### 3.3 மின் ஆளுமை

### i) பயணச்சீட்டு முன்பதிவு அமைப்பு

அரசு போக்குவரத்துக் கழகங்கள் மின்னணு முறையில் பயணச் சீட்டு முன்பதிவு செய்யும் முறையை 01.06.2007–இல் அறிமுகப்படுத்தியுள்ளது. பயணிகள் அரசு போக்குவரத்துக் கழகங்களின் வலைதளமான https://www.tnstc.in, கைபேசி செயலி, முகமை மையங்கள் மற்றும் பஸ் இந்தியா போர்டெல் (Bus India Portal) ஆகியவற்றின் மூலமாக மின்னணு முறையில் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்ய வழிவகுக்குகிறது. இதன் வழியாக 60 நாட்களுக்கு முன்பாகவே பயணியர் முன்பதிவு செய்துகொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பயணிகள் தங்களுக்கு விருப்பமான பயண வழித்தடம், புறப்பாடு – வருகை நேரங்களை இதன்மூலம் தேர்வு செய்ய முடிகிறது. இணையதள பயணச்சீட்டு முன்பதிவு அமைப்பின் மூலம் (Online Ticket Reservation System) தமிழ்நாடு மற்றும் ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற அண்டை மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி போன்ற

யூனியன் பிரதேசத்தில் 61 இடங்களில் 64 முன்பதிவு மையங்களில் முன்பதிவு செய்யப்படுகின்றன.

உடனடி வழித்தட முன்பதிவு அமைப்பின் முக்கிய நோக்கம், முன் திட்டமிடப்பட்ட பயணத்தைத் தேர்வுசெய்ய அதிக பயணிகளை ஊக்குவிப்பதாகும். மேலும், தேவை அடிப்படையிலான பேருந்து சேவைகளை இயக்கவும் மற்றும் பேருந்து நிலையங்களில் கடைசி நிமிட நெரிசலைக் குறைக்கவும் உதவுகிறது. இத்திட்டமானது, மொத்தம் 1,38,794 இருக்கைகளுடன் 2,903 பேருந்து புறப்பாடுகளை உள்ளடக்கியது. சராசரியாக ஒரு நாளைக்கு 17,586 இருக்கைகள், அதிகபட்சமாக 26,168 இருக்கைகள் முன்பதிவு செய்யப்படுகின்றன.

பயணிகளுக்கு அனைத்து வகையான முன்பதிவுகளின் மூலமாக அனைத்து வகை பேருந்துகளில் இருவழி பயணச்சீட்டுகள் முன்பதிவு செய்யும் போது 10% கட்டணச் சலுகை

வழங்கப்படுகிறது. இச்சலுகையானது பண்டிகை மற்றும் முக்கிய நாட்களுக்கு பொருந்தாது.

ஒருவழித் தடத்தில், முன்பதிவு மையங்கள் இல்லாத இடத்தில், முன்பதிவு செய்யும் பயணிகளின் வசதிக்காக தற்போது இணையதளம் மூலமாக எதிர்முனையிலும் இருக்கைகள் முன்பதிவு செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது.

முன்பதிவு செய்து பயணம் செய்யும் பயணிகள், முன்பதிவு பயணச்சீட்டில் வழங்கப்பட்டுள்ள hyper link மூலம் அளிக்கப்படும் புகார்கள் மற்றும் கருத்துகள் பெறப்பட்டு கழக அதிகாரிகளால் உடனடியாக குறைகள் நிவர்த்தி செய்யப்படுகிறது.

பேருந்துகளில், தனியாக பயணம் செய்யும் பெண்களின் பாதுகாப்பிற்காக தற்போது நான்கு தனி இருக்கைகள் முன்பதிவு செய்து பயணம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இருக்கைகள் பேருந்து புறப்படும் 24 மணி நேரம் முன்பு வரை

பெண்களுக்காக மட்டுமே முன்பதிவு செய்யப்பட்டு பயணிக்க இயலும்.

பேருந்துகளில் முன்பதிவு செய்து தொடர்ந்து பயணிக்கும் பயணிகளுக்கான சிறப்பு சலுகையாக ஒரு மாதத்தில் ஐந்து முறைக்கு மேல் முன்பதிவு செய்து பயணிக்கும்போது அதே மாதத்தில் அதே வழித்தடத்தில் அடுத்து பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்யும் ஒவ்வொரு பயணத்திற்கும் 50 சதவீத பயண கட்டணச் சலுகை அளிக்கப்படும். இச்சலுகை அனைத்து வகைப் பேருந்துகளிலும் பொருந்தும்.

**(ii) தானியங்கி கட்டண அமைப்பு**

பேருந்து கட்டணங்கள் தற்போது அச்சிடப்பட்ட காகித பயணச் சீட்டுகளைப் பயன்படுத்தி பணமாக வசூலிக்கப்படுகின்றன. இது வருவாய் சேகரிப்பில் சவால்களை முன்வைக்கிறது. இது கட்டண முறைகேடுகளுக்கு வழிவகுக்கிறது. இம்முறை பயணிகளுக்கு பயணச் சீட்டின் மீதமுள்ள தொகையினை வழங்குவதிலும் மற்றும் தினசரி வசூல்

தொகையை கையாள்வதிலும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

இந்தச் சிக்கல்களைத் தீர்க்க, தேசிய பொது இயக்க அட்டை (NCMC) இணக்கமான தானியங்கி கட்டண வசூல் முறையை செயல்படுத்துவது அவசியம். இந்த அமைப்பு குடிமக்களுக்கு தடையற்ற மற்றும் பல முறை கட்டணம் செலுத்தும் வசதியை வழங்கும் பல்வேறு சேவைகளுக்கு கட்டணங்களை செலுத்த அனுமதிக்கிறது. இது மற்ற பங்குதாரர்களுக்கு வருவாய் தரவுகளுக்கான நிகழ்நேர அணுகலுடன் பொதுவான தளத்தையும் வழங்கும். அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கும் 10 வருட காலத்திற்கு, செயல்பாடு மற்றும் பராமரிப்பை உள்ளடக்கிய சேவைகளை (ETMs & Software) இலவசமாக வழங்க பாரத ஸ்டேட் வங்கி உறுதியளித்துள்ளது. இருப்பினும், பணிமனை உள்கட்டமைப்பு மற்றும் பயணச்சீட்டு பட்டியல்

வழங்குவது அரசு போக்குவரத்துக் கழகங்களின் பணியாகும்.

தானியங்கி கட்டண அமைப்பு முன்முயற்சி ஏற்கெனவே அரசு விரைவு போக்குவரத்து கழகம் மற்றும் மாநகர் போக்குவரத்து கழகம் ஆகிய இரண்டிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. பாயிண்ட் ஆப் சேல் கருவியின் மூலம் **(POS)** ஒருங்கிணைக்கப்பட்ட பரிமாற்ற செயல்முறை (UPI) பரிவர்த்தனைகள் திறம்பட செயல்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) மற்றும் (கும்பகோணம்) லிமிடெட் ஆகியவற்றில் 100% பாயிண்ட் ஆப் சேல் கருவி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட்டில் 93 விழுக்காடும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட்டில் 92 விழுக்காடும் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட்டில்

88 விழுக்காடும் பாயிண்ட் ஆப் சேல் கருவி விநியோகம் செய்யப்பட்டு, விரைவில் சோதனை ஓட்டம் தொடங்க உள்ளது. இந்த அமைப்பிலிருந்து உருவாக்கப்படும் தரவு, வழித்தடச் சீரமைப்பு மற்றும் எதிர்கால பேருந்து வழித்தட திட்டமிடலுக்குப் பயன்படுத்தப்படும்.

**iii) மின்னணு முறையில் ஏலமிடுதல்**

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்கள் தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மற்றும் கழிவுப் பொருட்களை மின்னணு முறையில் ஏலமிடும் பணியை மேற்கொண்டு வருகின்றன. இம்முறை மூலம், கழிவு செய்யப்பட்ட பேருந்துகள் மற்றும் கழிவு செய்யப்பட்ட உதிரி பாகங்கள் சிறந்த விலையைப் பெற முடிகிறது. இம்முறை மூலம் 2023–2024–ஆம் நிதியாண்டில், மொத்தம் ரூபாய் 31.78 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**iv) பயண திட்டமிடல் செயலி**

சென்னையில் பேருந்து பயணிகள் பேருந்திற்காக காத்திருக்காமல் பேருந்து பயணத்தை திட்டமிடுவதற்கு ஆன்ட்ராய்டு மற்றும் iOS இயங்குதளங்களுக்கு ஏற்ற "சென்னை பேருந்து செயலி" (Chennai Bus App) என்ற தகவல் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கைபேசி செயலி ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடத்தில் பேருந்தின் புறப்பாடு, சேருமிடம் மற்றும் வழியினை வரைபடத்தில் காண்பிக்கும். மேலும், அந்த வழித்தடத்தில் ஓடும் பேருந்துகளின் தற்போதைய இருப்பிடம், அந்த பேருந்து நிறுத்தத்திற்கு அடுத்து வரும் 5 பேருந்துகள் வந்து சேரும் நேரம், வழித்தட எண்கள், அருகிலுள்ள பேருந்து நிறுத்தங்களின் பட்டியல் போன்றவற்றுடன் பயனாளிகள் தற்போதைய இருப்பிடத்தினையும் காட்டும். ஏதேனும் ஒரு பேருந்தை தேர்ந்தெடுத்து பார்க்கும்போது, அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தை எப்போது வந்தடையும் என்பதை பயணிகள் முன்கூட்டி அறிந்து கொள்ளலாம்.

வலைதளத்தின் மூலமாகவும் இச்செயலியை அணுகலாம். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகமும் இச்செயலியில் ஒருங்கிணைந்துள்ளது. இச்செயலி இதர அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளிலும் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயலியை 8,63,925 நபர்கள் பதிவிறக்கம் செய்து பயனடைந்துள்ளனர்.

**v) பயணிகள் குறைகள் மற்றும் புகார் தீர்வு உதவி எண்**

ஒருங்கிணைந்த பயணிகள் குறைதீர்க்கும் மற்றும் புகார் தீர்வு உதவி எண்."149" அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்காக, பேருந்து தொடர்பான தகவல்களை பெறவும், புகார்கள் மற்றும் குறைகளை தெரிவிக்கவும் சென்னையிலுள்ள மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடத்தில் உதவி மையம் செயல்பட்டு வருகிறது. 24 மணி நேரமும் தொலைபேசி அழைப்புகள் மூலம் உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம். பயணம் செய்யும் பயணிகள், பேருந்து நிறுத்தங்கள், பேருந்து நிலையங்களில்

காத்திருக்கும் பயணிகள் அல்லது பொதுமக்கள் கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் புகார்கள், குறைகளை தெரிவிக்கலாம் மற்றும் தகவல்களையும் பெறலாம். தொலைபேசி அழைப்புகள் மூலம் பெறப்படும் புகார்கள் மற்றும் குறைகளுக்கு தனித்துவமான அடையாள எண் (ID) ஒதுக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, பின்னர் ஒப்புகை குறுஞ்செய்தி (SMS) பயணிகளுக்கு அனுப்பப்படும். பெறப்படும் புகார்கள் மற்றும் குறைகளை அந்தந்த போக்குவரத்துக் கழகங்கள் மூலம் கண்காணித்து விரைந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தந்த அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு உட்பட்ட புகார்கள் மற்றும் குறைகளுக்கு தீர்வு காணப்பட்டபின் பயணிகளுக்கு மீண்டும் குறுஞ்செய்தி (SMS) அனுப்பப்படும்.

அரசு பேருந்துகளின் தூய்மை, தாமத இயக்கம், தட முறிவு, பேருந்து நிலையங்களிலிருந்து தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல பேருந்து இல்லாமை,

நெரிசல் மிகுந்த நேரங்களில் பேருந்து நிறுத்தங்களில் நீண்ட நேரம் காத்திருப்பது, பேருந்து நிறுத்தங்களில் நிற்காமல் செல்லுதல், பேருந்தினுள் பொருட்களை தவற விடுவது, பணியாளர்களின் தவறான நடத்தை, சக பயணிகளால் துன்புறுத்தல், அதிவேக இயக்கம், பேருந்துகளை சரியாக பராமரிக்காதது, விபத்துகள், வெள்ளம் மற்றும் கலவரம் போன்ற நேரங்களில் பேருந்து இயக்கம் தொடர்பான புகார்கள் மற்றும் குறைகளை தெரிவிக்கலாம். பண்டிகைக் கால சிறப்பு பேருந்து இயக்கம் போன்ற தகவல்களையும் பெறலாம். பணியாளர்கள் அசம்பாவிதங்கள் குறித்த எச்சரிக்கை செய்திகளை உதவி எண்ணிற்கு தொலைபேசி வாயிலாக தெரிவிக்கலாம். புகார்கள் மற்றும் குறைகளுக்கான தீர்வு விகிதம் 99 சதவீதமாகும்.

**(vi) அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான வலைதளம் (Arasu Bus).**

அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் தினசரி பயணம் மேற்கொள்ளும் சுமார் 1.76 கோடி பயணிகளும், பொதுமக்களும்

பயனடைவதற்காக "அரசு பஸ்" (www.arasubus.tn.gov.in) என்ற பொதுவான வலைதளம் தொடங்கப்பட்டுள்ளது. பொது மக்கள் / பயணிகள் இந்த வலைதளத்திற்கு சென்று பேருந்து வழித்தடங்களின் நேரம், அரசு போக்குவரத்துக் கழகங்களின் சேவைகள், நிர்வாகக் கட்டமைப்பு, புகைப்பட தொகுப்பு, புகார்கள் மற்றும் குறைகளை சமர்ப்பிப்பதற்கான தொடர்புத் தகவல்கள் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்களின் சரக்கு மற்றும் சேவை வரி (GST) எண்கள் தொடர்பான தகவல்களை பெறலாம். இந்த வலைதளத்தில் உருவாக்கப்பட்டுள்ள இணைப்பு வசதி மூலம் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து வருகை மற்றும் இயக்க நேரம் குறித்த விவரங்கள், வழித்தட தகவல்களை பயணிகள் அறிந்து கொள்ள "சென்னை பேருந்து செயலி" மற்றும் தொலைதூர பேருந்துகளுக்கு முன்பதிவு செய்வதற்கான இணையவழி பயணச்சீட்டு முன்பதிவு முறையில் (OTRS) வலைதளங்களை எளிதாக அணுக வசதி

செய்யப்பட்டுள்ளது. மேலும், சாலை போக்குவரத்து நிறுவனம், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் போன்ற போக்குவரத்து தொடர்பான நிறுவனங்களின் இணையதளங்களை எளிதாக அணுகவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**(vii) அரசு பஸ்–சமூக ஊடகம் – எக்ஸ் தளம் (X Platform)**

"X" தளத்தில் "அரசு பஸ்" (@arasu bus) என்ற பெயரில் அதிகாரப்பூர்வ சமூக ஊடக தளமாக செயல்படுகிறது. இத்தளத்தில் முக்கியமான செய்திகள், சிறப்புப் பேருந்து இயக்கங்கள், அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகள் பகிரப்படுகின்றன. கூடுதலாக, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சிகளில் முக்கியமான செய்திகள் பயணிகளுக்கு விரைவாக பரவுவதை உறுதி செய்கிறது.

**(viii) இணையதளத்தின் மூலம் பேருந்து அட்டை**

பேருந்து பயண அட்டைதாரர்கள் நேரடியாக பயண அட்டை வழங்கும் மையத்திற்கு செல்வதை

தவிர்ப்பதற்காகவும், நேரத்தை மிச்சப்படுத்துவதற்கும், காகித பயன்பாட்டை குறைப்பதற்கும், நீண்ட வரிசையில் நிற்பதை தவிர்ப்பதற்கும் இணையதளத்தின் மூலம் பேருந்து அட்டை வழங்கும் முறையானது அவசியமானதாகும். அந்தவகையில், தற்போது மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் மாற்றுத்திறனாளிகள், தமிழ் அறிஞர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இணையதளத்தின் மூலமாக பேருந்து பயண அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. தானியங்கி மூலம் கட்டணங்கள் வசூல் செய்யும் முறை ஏற்படுத்தப்பட்டவுடன், அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**(ix) கைவிரல் ரேகை வருகைப்பதிவு முறை**

அரசு போக்குவரத்துக் கழகங்களிலுள்ள தலைமை அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள், பணிமனைகள், பயிற்சி நிலையங்கள் மற்றும் இதர அலகுகளில் பணியாளர்களின் தினசரி வருகை பதிவினை முறையாக கண்காணிக்க

கைவிரல் ரேகை வருகைப்பதிவு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. பணி நேரத்தின்போது, பணியாளர்கள் அலுவலகத்திற்குள் வரும் நேரத்தையும் அலுவலகத்தைவிட்டு வெளியே செல்லும் நேரத்தையும் பதிவு செய்து வைக்கும் வகையில் ஒவ்வொரு பணியாளரின் விரல் ரேகை பதிவும் பயன்படுகிறது. மாத இறுதியில் பணியாளர்களின் சம்பளப் பட்டியலை தயாரிப்பதற்கு இது மிகவும் பயனுள்ளதாகவுள்ளது. 99.26 சதவீத பணியாளர்கள் கைவிரல் ரேகை வருகை பதிவு முறையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

**(x) கண்காணிப்பு கேமரா (CCTV) பாதுகாப்பு அமைப்பு**

அரசு போக்குவரத்துக் கழகங்களின் தலைமை அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள், பணிமனைகள் மற்றும் இதர இடங்களின் உள்கட்டமைப்புகளில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பை மேம்படுத்த கண்காணிப்பு கேமரா

பாதுகாப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இவ்வமைப்பில் 66.59 சதவீதம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**(xi) ஓய்வூதியதாரர்கள் உயிர்வாழ் சான்றிதழை இணையத்தின் வாயிலாக சமர்ப்பித்தல்**

அரசுப் போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்கள் உயிர்வாழ் சான்றிதழை (Life Certificate) இணையத்தின் வாயிலாக சமர்ப்பிக்கும் முறையை நடைமுறைப்படுத்தவும், முன்னரே உள்ள செயல்முறையை நெறிப்படுத்தவும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வசதியை மேம்படுத்தவும் வாய்ப்புள்ளது. ஓய்வூதியம் பெறுபவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் ஆதரவுடன் ஒரு பிரத்யேக இணைய முகப்பு (Online Portal) உருவாக்கப்பட்டுள்ளது. இச்சேவைகளை, இ–சேவை மையம் மூலம் பெறலாம். மேலும், ஓய்வூதியதாரர் தரவின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக, ஓய்வூதியம் பெறுவோர் இணைய அமைப்பின் மூலம்

தங்கள் உயிர்வாழ் சான்றிதழை சமர்ப்பிக்கலாம். மொத்தம் 3,360 ஓய்வூதியதாரர்கள் தங்கள் உயிர்வாழ் சான்றிதழ்களை இணையத்தின் வாயிலாக சமர்ப்பித்துள்ளனர்.

**(xii) மின்னணு அலுவலக (e–Office) செயல்பாடு**

தேசிய தகவல் மையம் (NIC), புதுடெல்லி உருவாக்கிய மின்னணு அலுவலக செயல்பாட்டினை அனைத்து அரசுத் துறைகளிலும் மேம்படுத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. இந்த முயற்சியானது தற்போது நடைமுறையிலுள்ள கோப்பினை மின்னணு செயலாக்கத்துடன் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தினை (IFHRMS) பயன்படுத்தி, மின்னணு வடிவத்தில் அனைத்து மனிதவள/அலுவலக செயல்முறை தொடர்பான செயல்பாடுகளை மாற்றுவதாகும்.

காகித பயன்பாட்டினை குறைப்பதற்காக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA)

உதவியுடன் அரசு போக்குவரத்துக் கழகங்கள், சாலை போக்குவரத்து நிறுவனம், பல்லவன் போக்குவரத்து அறிவுரை பணிக்குழு மற்றும் தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்பு துறை ஆகியவற்றில் மின்னணு அலுவலக முறையினை செயல்படுத்துவற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**3.4 பயணிகளின் பாதுகாப்பு**

**(i) பேருந்துகளில் கதவுகள் பொருத்துதல்**

பயணிகளின் பாதுகாப்பிற்கு பேருந்துகளில் கதவுகள் அவசியம். பேருந்து பயணத்தின்போது பயணிகள் கீழே விழுவதிலிருந்தும், வெளிப்புற பொருட்களால் காயமடைவதிலிருந்தும் பேருந்து கதவுகள் பாதுகாக்கிறது. இது, பேருந்து படிக்கட்டில் நின்றுக்கொண்டு பயணம் செய்வதைத் தடுக்கிறது. மேலும், தூசு, மழை மற்றும் இரைச்சல் போன்றவற்றிலிருந்து பாதுகாத்து, ஒரு சௌகரியமான பயணத்திற்கு வழிவகுக்கிறது. முன்னரே, 468 மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் கதவுகள்

பொருத்தப்பட்டுள்ள நிலையில், இதர போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் கதவுகள் பொருத்தப்படும்.

**(ii) பேருந்துகளில் பக்கவாட்டு பாதுகாப்பு அலகு**

பேருந்து பக்கவாட்டு பாதுகாப்பு அலகானது பயணிகள் பேருந்துகளில் ஏறும் போதும், இறங்கும் போதும், சாலைகளில் நடந்து செல்லும்போதும் மற்றும் இரு சக்கர வாகனங்களில் பயணிக்கும்போதும், பேருந்துகளின் பின்புற சக்கரங்களில் சிக்காமல் வாகன விபத்து ஏற்படாவண்ணம் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துகிறது. இது பெருமளவு உயிர் இழப்புகளை குறைப்பதுடன், பெரும் காயங்கள் மற்றும் உயிர் இழப்பை தடுக்கிறது. பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்த அமைப்பு மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 1,567 பேருந்துகளில் நிறுவப்பட்டுள்ளது.

**3.5 இதர முயற்சிகள்**

- காற்று மாசினை குறைப்பதற்காக, அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG), திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) முதலிய மாற்று

எரிபொருளின் உதவியுடன் இயங்கக்கூடிய சுற்றுச்சூழலுக்கு உகந்த பேருந்துகளை அறிமுகப்படுத்த 13.06.2024 அன்று ஒரு முன்னோடித் திட்டம் தொடங்கப்பட்டது. அந்த வகையில், மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) லிமிடெட் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட் தலா இரண்டு திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு பேருந்துகளையும் (LNG), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் இரண்டு அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு பேருந்துகளையும் (CNG) அறிமுகப்படுத்தியுள்ளன. இப்பேருந்துகள் பொது போக்குவரத்திற்கான தூய்மையான மற்றும் நிலையான எதிர்காலத்தை நோக்கி செயல்படுகின்றன.

- தடையற்ற பயணத்திற்கு, புறநகர் பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணம் செய்த பயணிகள் கூடுதலாக ரூ.40/– செலுத்தி கிளாம்பாக்கம்

கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்திலிருந்து மற்ற இடங்களுக்கு 4 மணி நேரத்திற்குள் மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பயன்படுத்தி தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

- கும்பகோணம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள அனைத்து நவக்கிரகக் கோவில்களுக்கும் தினசரி சிறப்புப் பேருந்துகளை (குளிரூட்டப்பட்ட மற்றும் குளிரூட்டப்படாத) அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் அறிமுகப்படுத்தியுள்ளது. நவகிரக சிறப்புப் பேருந்துகளில் சிரமமில்லாமல் பயணிக்க "TNSTC Mobile App" அல்லது www.tnstc.in–இல் 90 நாட்களுக்கு முன்னதாக முன்பதிவு செய்யும் வசதி உள்ளது.
- அரசு போக்குவரத்துக் கழக இணையதளத்தில் இணையவழி பயணச்சீட்டு முன்பதிவு அமைப்பு (OTRS) மூலம் நெரிசல் இல்லாத நாட்களுக்கு முன்கூட்டியே பயணச்சீட்டுகளை முன்பதிவு

செய்யும் பயணிகள், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இம்முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு ரூ.10,000 ரொக்கப் பரிசு மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

- ஊட்டி மற்றும் கொடைக்கானல் ஆகிய சுற்றுலா தலங்களுக்கு செல்லும் சுற்றுலா பயணிகள் கட்டாயம் இ–பாஸ் பெற வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவிட்டது. இந்த முயற்சியானது சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் மலைவாசஸ்தலங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உள்ளூரில் வசிப்பவர்களுக்கு இ–பாஸ் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மே 2023 முதல் மே 2024 வரையிலான காலத்தில், ஊட்டியில் போக்குவரத்து நெரிசல் மற்றும் காற்று மாசினைக் கட்டுப்படுத்தும்

வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட்டின் மூலம் 67 பேருந்துகளை இயக்கியுள்ளது. இதன் விளைவாக, சுமார் 500 வாகனங்களும் மற்றும் காற்று மாசின் அளவு 91–லிருந்து 50–ஆக குறைக்கப்பட்டுள்ளது.

| மாதம் | இலகுரக வணிக வாகனங்கள் | ஈப்பு | சுற்றுலா வாகனங்கள் | அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மே 2024 | 2377 | 373 | 119 | 67 | 2936 |
| மே 2023 | 2853 | 429 | 136 | 18 | 3436 |
| குறைப்பு | –476 | –56 | –17 | 49 | –500 |

### 3.6 கட்டணமில்லாத வருவாய்

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான முக்கிய வருவாய் பயணச்சீட்டு கட்டணங்களிலிருந்து பெறப்படுகிறது. இதில் பேருந்துகளில் பயணச்சீட்டு, இணையதள பயணச்சீட்டு முன்பதிவு, சலுகைக் கட்டணங்கள், கட்டணமில்லா பயணச்சீட்டுகள், காவல்துறை பயண வாரண்டுகள், மாணவர்கள் மற்றும் மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத்திற்கான செலவினத்தை ஈடுசெய்தல் ஆகியவை அடங்கும். கூடுதலாக, பழைய பேருந்துகள் மற்றும் கழிவு

செய்யப்பட்ட உதிரி பாகங்களை விற்பனை செய்வதன் மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்கள் வருவாய் ஈட்டுகின்றன. மேலும், கட்டுமான உள்கட்டமைப்பு மற்றும் நில உடைமை ஆகியவற்றை நிலையான வணிக வருவாயை ஈட்டுவதற்கு பயன்படுத்தலாம் என்பதை அரசு போக்குவரத்துக் கழகங்கள் உணர்ந்துள்ளன. இந்த நோக்கத்திற்கான பல்வேறு ஆதாரங்களின் விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண். | விவரம் |
|---|---|
| 1. | பேருந்து பணிமனைகள் மற்றும் பேருந்து முனையங்களில் வணிக மேம்பாடு |
| 2. | பேருந்துகளில் முழு விளம்பரம் |
| 3. | பேருந்துகளில் இதர விளம்பரம் |
| 4. | பிற விளம்பரங்கள் |
| 5. | அடுத்த பேருந்து நிறுத்த அறிவிப்பு |
| 6. | பயணவழி உணவக நிறுத்தம் மற்றும் வாடகை |
| 7. | சரக்கு / சிப்பம் |
| 8. | கழிவுசெய்யப்பட்ட உதிரிப் பாகங்கள் விற்பனை |
| 9. | நிலம் அல்லது கட்டடம் குத்தகை |
| 10. | எரிபொருள் சில்லறை விற்பனை நிலையம் |
| 11. | ஓட்டுநர் பயிற்சி பள்ளி / பயிற்சி மையம் |
| 12. | ஒப்பந்த வாகனம் |
| 13. | வாடகை கடைகள் |
| 14. | சிப்பஞ்சல் |

**(i) பேருந்து நிலையங்கள் / பேருந்து முனையங்களை வருவாய் ஈட்டக் கூடியதாக மேம்படுத்துதல்**

இயக்க வருவாய் கொரோனா பெருந்தொற்றுக்கு முந்தைய நிலையை எட்டியிருந்தாலும், பயணக் கட்டணம் மூலம் பெறக்கூடிய வருமானம் செலவுகளைச் எதிர்கொள்ள போதுமானதாக இல்லாததால், கட்டணமில்லா வருவாயைப் (Non fare box revenue) பெருக்குவதற்கு, போக்குவரத்துக் கழகங்களின் கட்டுப்பாட்டிலுள்ள சொத்துக்களின் மூலம் வருவாயினை பெருக்குவது என்பது காலத்தின் தேவையாகும். இதர வருவாய்களை பெருக்குவதற்கு உந்துதலாக உள்ள முக்கிய ஆதாரமான சொத்துக்கள் அதாவது சென்னை போன்ற பெருநகரங்களில் மற்றும் பிற நகரங்களில் உள்ள பேருந்து நிலையங்கள், நகரங்களின் மையப் பகுதிகளில் கழகங்களுக்கு சொந்தமான இடங்கள் மூலம் வருவாய் ஈட்டலாம். இதன் அடிப்படையில், மாநகர் போக்குவரத்துக் கழக கட்டுப்பாட்டிலுள்ள 12 பேருந்து பணிமனைகள் /

முனையங்களை நவீனப்படுத்துவதற்கும், வணிக வளர்ச்சி அடைய செய்வதற்கும் தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்துடன் (TNIDB) இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக, மாநகர் போக்குவரத்துக் கழகத்திலுள்ள மூன்று பணிமனை / முனையங்களை நவீனமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT), சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் போன்ற அரசு நிறுவனங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஆர்வமாக உள்ளன.

**(ii) அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான இடங்களில் எரிபொருள் சில்லறை விற்பனை நிலையங்களை அமைத்தல்**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் தலைமை அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள் மற்றும் பேருந்து பணிமனைகளில் குறிப்பிடத்தக்க அளவு காலி நிலங்களைக் கொண்டுள்ளன. இவ்விடங்கள்

நகரங்களின் முக்கிய பகுதிகளில் அமைந்துள்ளன. நாட்டிலேயே வாகன எண்ணிக்கை அதிகமாகக் கொண்ட இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. எண்ணெய் நிறுவனங்கள் போக்குவரத்துக் கழகங்களுக்கு சொந்தமான இடங்களில் எரிபொருள் சில்லறை விற்பனை நிலையங்களை அமைக்க முன்வந்துள்ளன. இந்நிறுவனங்கள் தேவையான உள்கட்டமைப்பை மேம்படுத்தி தேவைக்கேற்ப எரிபொருளை விற்பனை செய்யும் அதே வேளையில், நிலத்திற்கு வாடகை செலுத்துவதுடன், விற்கப்படும் எரிபொருளின் அளவின் அடிப்படையில் commission தொகையினை வழங்கும். அரசு போக்குவரத்துக் கழகங்கள் எரிபொருள் நிலையங்களை இயக்குவதற்கு பொறுப்பாவார்கள். தற்போது, ஒரு எரிபொருள் சில்லறை விற்பனை நிலையம் செயல்பாட்டிலுள்ளது. இதர இடங்களில் எரிபொருள் நிலையங்களை அமைப்பதற்கான

முன்னேற்றத்தை கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து அறியலாம்.

| வ. எண். | பொருள் | மொத்தம் |
|---|---|---|
| 1. | மொத்த இடங்கள் | 372 |
| 2. | சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்ட இடங்கள் | 186 |
| 3. | எரிபொருள் நிலையம் அமைக்க சாத்தியமுள்ள இடங்கள் | 52 |
| 4. | செயல்பாட்டிலுள்ள இடங்கள் | 1 |
| 5. | கட்டுமான நிலையிலுள்ள இடங்கள் | 4 |

## 3.7 செலவு சேமிப்பு முயற்சிகள்

### (i) சூரிய மின்னாற்றல் திட்டம்

அரசு போக்குவரத்துக் கழகங்களின் தலைமை அலுவலகங்கள், மண்டல அலுவலகங்கள் மற்றும் பேருந்து பணிமனைகளின் கட்டடங்களின் மேற்கூரைகளில் சூரிய மின்னாற்றல் தகடுகள் அமைப்பதன் மூலம் மின் கட்டணங்கள் சேமிக்கப்படுகிறது.

சூரிய மின்னாற்றல் மூலம் உற்பத்தி செய்யப்படும் அதிகப்படியான மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்பனை செய்வதற்கு வாய்ப்புள்ளது. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் சூரிய

மின்னாற்றல் தகடுகள் அமைப்பதற்கு தேவையான நிதியை வழங்கும். 191 இடங்களில், 24 இடங்களில் இத்தகடுகள் நிறுவப்பட்டு செயல்பாட்டிலுள்ளது.

| வ. எண். | பொருள் | மொத்தம் |
|---|---|---|
| 1. | மொத்த இடங்கள் | 373 |
| 2. | சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்ட இடங்கள் | 280 |
| 3. | சூரிய மின்னாற்றல் தகடுகள் அமைக்க சாத்தியமுள்ள இடங்கள் | 191 |
| 4. | செயல்பாட்டிலுள்ள இடங்கள் | 24 (214 கிலோ வாட்) |
| 5. | சூரிய மின்னாற்றல் தகடுகள் அமைக்கப்படவேண்டியுள்ள இடங்கள் | 167 |

**4. சமூக நலத்திட்டங்கள் – "விடியல் பயணத் திட்டம்"**

சமூக, பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் சிறப்பான பங்களிப்பினை உயர்த்தும் முயற்சியில், அரசு போக்குவரத்துக் கழக சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ள 07.05.2021 அன்று "விடியல் பயணம்" திட்டம் துவங்கப்பட்டுள்ளது. மலைப் பகுதிகள் மற்றும் பகுதி மலைப் பகுதிகளில் இயக்கப்படும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ளும் வகையில் இத்திட்டமானது 19.02.2024 அன்று மலைப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்கேற்பு விகிதத்தை அதிகரிப்பதும், பொதுப் போக்குவரத்தை ஊக்குவிப்பதாகும். ஏழ்மை நிலையிலுள்ள பெண்கள் வேலை, மருத்துவமனைகள் மற்றும் சமூக நோக்கங்களுக்காக பயணிப்பதற்கு இத்திட்டம் மிகவும்

உதவியாகவுள்ளது. இத்திட்டத்தினால், பெண்கள் சுயதொழில் தொடங்க வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதுடன், தனியார் பேருந்துகளில் பயணிக்கும் பெண்கள் தற்போது அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணிக்கும் நிலைக்கு மாறியுள்ளனர்.

தமிழ்நாட்டில் பெண்கள் கட்டணமில்லா பேருந்துகளில் பயணிப்பதன் விளைவாக பேருந்துகளில் பயண நடைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தற்போது, 7,334 சாதாரண கட்டண நகரப் பேருந்துகள் / மலைப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வகைப் பேருந்துகளில் தினமும் சுமார் 54 இலட்சம் பெண்கள் பயணிக்கின்றனர். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 490 கோடிக்கு மேல் பேருந்துகளில் பெண்கள் பயண நடைகளை மேற்கொண்டுள்ளனர். இது சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மொத்த பயணிகளில் 65.26 சதவீதமாகும்.

இத்திட்டத்தினை மாநிலத் திட்டக் குழு மதிப்பீடு செய்ததில், சராசரியாக ஒவ்வொரு பெண் பயணியும் பயணக் கட்டணத்திற்கு ஈடாக மாதத்திற்கு ரூ.888/– சேமித்துள்ளனர். இச்சேமிப்பு பெண்களுக்கு தேவையான பொருட்களை வாங்கவும் மற்றும் அவர்களின் குடும்பங்களின் ஊட்டச் சத்தினை மேம்படுத்தவும் உதவுகிறது. இதன் விளைவாக, பெண்கள் அதிக அதிகாரமளிக்கப்படும் உணர்வை அனுபவித்து, சமுதாயத்தில் அதிக முக்கியத்துவம் பெற்றவர்களாக திகழ காரணமாகிறது.

இத்திட்டமானது, திருநங்கைகள் மற்றும் 40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர் (Escort) ஒருவர் அவர்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டத்தில், திருநங்கைகளும் தினசரி சராசரியாக 3,105 பயண நடைகளுடன் மொத்தம் 29 இலட்சம் பயண நடைகளை மேற்கொண்டுள்ளனர்.

இத்திட்டத்தில், மாற்றுத்திறனாளிகளும் தினசரி சராசரியாக 48,636 பயண நடைகளுடன் மொத்தம் 3.93 கோடி பயண நடைகளை மேற்கொண்டுள்ளனர். 3,237 மாற்றுத்திறனாளியுடன் பயணிக்கும் துணையாளர் 22 இலட்சம் பயண நடைகளை மேற்கொண்டுள்ளனர்.

## 5. புதிய பேருந்துகள் கொள்முதல்

### 5.1 வயது முதிர்ந்த பேருந்துகளை கழிவு செய்தல் கொள்கை

வயது முதிர்ந்த பேருந்துகள் கழிவு செய்தல் கொள்கையானது, பேருந்தின் வயது, இயக்கப்பட்ட தூரம் போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. சாலையின் தரம், உயரும் வாகன தொழில்நுட்பங்கள், பேருந்து கூண்டுகளின் ஆயுட்காலம், புதிய கழிவு செய்தல் கொள்கைகள், அண்டை மாநிலங்களால் கடைபிடிக்கப்படும் கொள்கைகள், அரசு போக்குவரத்துக் கழகங்களால் கடைபிடிக்கப்படும் பராமரிப்பு முறையில் முன்னேற்றம். மின்சார வாகனங்கள், அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (**CNG**) போன்றவற்றை பயன்படுத்தும் மாற்று எரிபொருளில் இயங்கும் வாகனங்கள் போன்ற மாசில்லா வாகனங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றை கருத்திற்கொண்டு விதிமுறைகள் அவ்வப்போது திருத்தி அமைக்கப்படுகின்றன. மேலும், எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம், பராமரிப்புச் செலவு

மற்றும் மூலதனச் செலவு ஆகியவற்றை கருத்திற்கொண்டு முறையான செலவினம் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

அரசாணை (நிலை) எண்.70, போக்குவரத்து (அ) துறை, நாள் 08.07.2021-இல் வெளியிடப்பட்ட கழிவுசெய்தல் கொள்கையின்படி, விரைவுப் பேருந்துகள் 7 ஆண்டுகளின் முடிவில் அல்லது 12 இலட்சம் கிலோமீட்டர் தூரம் ஓடி முடித்தல் இவற்றில் எது முந்தையதோ, அதை கணக்கில் கொண்டு அந்த பேருந்துகள் மாற்றப்படும். இதேபோல், மற்ற அனைத்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகங்களின் பேருந்துகள் 9 ஆண்டுகளின் முடிவில் அல்லது 12 இலட்சம் கிலோமீட்டர் ஓடி முடித்தல் இவற்றில் எது முந்தையதோ அதை கணக்கில் கொண்டு மாற்றப்பட வேண்டும்.

31.05.2024 அன்றுள்ளவாறு, அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் வயது முதிர்ந்த

பேருந்துகளின் எண்ணிக்கை 10,001 ஆகும். இது மொத்த பேருந்துகளில் 49.60% ஆகும்.

### 5.2 புதிய பேருந்துகள்

பயணிகளுக்கு வசதியான போக்குவரத்து, பேருந்து பழுதுகளை குறைப்பது, மாசுபாட்டைக் குறைத்தல், சொந்த வாகனப் பயனாளர்களை பேருந்துகளுக்கு ஈர்ப்பது போன்ற பல்வேறு அம்சங்களை குறிக்கோளாகக் கொண்டு புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படுகிறது.

அரசு 8,682 புதிய பேருந்துகளை கொள்முதல் செய்ய திட்டமிட்டுள்ளது. ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW), உலக வங்கி, சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP) மற்றும் அரசின் நிதியுதவியுடன் 8,182 புதிய பேருந்துகளை பின்வருமாறு வாங்க உத்தரவிட்டுள்ளது:–

| வ.எண். | நிதியுதவி | புதிய பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசு (2022-23) (டீசல் பேருந்துகள்) | 1000 |
| 2. | அரசு (2023-24) (டீசல் பேருந்துகள்) | 1000 |
| 3. | அரசு (2024-25) (டீசல் பேருந்துகள்) | 3000 |
| 4. | சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP) (டீசல் பேருந்துகள்) | 16 |
| 5. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) (டீசல் பேருந்துகள்) | 2166 |
| 6. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) (மின்சாரப் பேருந்துகள்) | 500 |
| 7. | உலக வங்கி (மொத்த செலவு ஒப்பந்த மாதிரி அடிப்படையில் மாநகர் போக்குவரத்துக் கழகம்) | 500 |
| **மொத்தம்** | | **8182** |

✓ 8182 பேருந்துகளில் 1088 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. கூடுதலாக, மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்காக 500 மின்சாரப் பேருந்துகள் மொத்த செலவு ஒப்பந்த மாதிரி அடிப்படையில் கொள்முதல் செய்யப்படவுள்ளன.

✓ கூடுதலாக, ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) நிதியுதவியுடன் மூன்று, நான்கு மற்றும் ஐந்து கட்டங்களில் புதிய பேருந்துகள் வாங்கப்படவுள்ளன. இதில் 7,661 டீசல் பேருந்துகள் மற்றும் 1500 மின்சார பேருந்துகள் உள்பட மொத்தம் 9,161 புதிய பேருந்துகளுக்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| வ. எண். | நிதியுதவி | புதிய பேருந்துகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) – மூன்றாம் கட்டம் (டீசல் பேருந்துகள்) | 2369 |
| 2. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) – நான்காம் கட்டம் (டீசல் பேருந்துகள்) | 2369 |
| 3. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) – ஐந்தாம் கட்டம் (டீசல் பேருந்துகள்) | 2923 |
| 4. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) – மூன்றாம் கட்டம் (மின்சாரப் பேருந்துகள்) | 750 |
| 5. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) – நான்காம் கட்டம் (மின்சாரப் பேருந்துகள்) | 650 |
| 6. | ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) – ஐந்தாம் கட்டம் (மின்சாரப் பேருந்துகள்) | 100 |
| **மொத்தம்** | | **9161** |

## 5.3 பேருந்துகளின் கூண்டு கட்டமைப்பு முழுவதையும் மறுசீரமைத்தல்

பயணிகள் தங்கள் பயணத்திற்காக, தரமான மற்றும் வசதியான பேருந்துகளை விரும்புகின்றனர். குறிப்பிட்ட ஆயுட்காலத்தில் பாதி ஆண்டுகள் நிறைவடைந்தவுடன், பேருந்தின் நிலையை உறுதி செய்வதற்கு, பேருந்தினை பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. இதனால் பேருந்து அடுத்த 5 முதல் 6 ஆண்டுகள் வரை யாதொரு கூடுதல் செலவினமுமின்றி இயங்குவதை உறுதி செய்யலாம். பழைய பேருந்தின் அடிச்சட்டம்

நல்ல நிலையில் இருக்கும்பட்சத்தில் அப்பேருந்துகளின் முழுக் கூண்டினையும் புதுப்பிக்க வாய்ப்பு உண்டு. பேருந்து புதுப்பிக்கப்பட்ட பின்னர், அடுத்த 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு யாதொரு கூடுதல் செலவினமுமின்றி பேருந்துகளை இயக்கலாம். தற்போது, 5 முதல் 8 ஆண்டுகள் வயதுள்ள பேருந்துகளின் முழுக் கூண்டுகள் மறுசீரமைக்க தேர்வு செய்யப்படுகிறது. 2022-2023-ஆம் ஆண்டில் 1000 பேருந்துகள் மற்றும் 2023-2024-ஆம் ஆண்டில் 500 பேருந்துகள் என இரண்டு நிதியாண்டுகளில் 1,500 பேருந்துகளை முழுமையாகப் புதுப்பிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது, 883 பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டு, இயக்கப்படுகின்றன.

## 6. சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

### 6.1 சாலைப் பாதுகாப்பு

தமிழ்நாட்டில், பேருந்துகள், டாக்ஸி, ஆட்டோ ரிக்க்ஷா, சரக்குந்து, இழுவை வண்டி, தொடர் வாகனங்கள் போன்ற 0.14 கோடி வணிக போக்குவரத்து வாகனங்கள் மற்றும் சொந்த உபயோகத்திற்கான இரண்டு, மூன்று சக்கர வாகனங்கள், மகிழுந்து, ஈப்பு போன்ற 3.45 கோடி போக்குவரத்து அல்லாத வாகனங்கள் என மொத்தம் 3.59 கோடி வாகனங்கள் இயக்கப்படுகின்றன. இந்தியாவிலேயே அதிக வாகன எண்ணிக்கை கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். போக்குவரத்து வாகன வகைகளில் 28,024 கட்டணநிலை பேருந்துகளும் மற்றும் 2,857 சிற்றுந்துகளும் உள்ளன. கட்டணநிலைப் பேருந்துகளில் 20,260 போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், 7,764 தனியார் பேருந்துகளும் உள்ளன. அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நாள் ஒன்றுக்கு 79 இலட்சம் கி.மீட்டருக்கு மேல்

இயக்கி சாலைப் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதுடன், சாலைப் பாதுகாப்பிற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

## 6.2 அரசு போக்குவரத்துக் கழகங்களின் சாலைப் பாதுகாப்பு முயற்சிகள்

சாலைப் பாதுகாப்பு என்பது வாகன உற்பத்தியாளர்கள், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சாலையைப் பயன்படுத்துபவர்களால் அனைத்து சாலை பாதுகாப்பு நடவடிக்கைகளையும் பின்பற்றி சாலை விபத்துகளைத் தடுப்பது மற்றும் பாதுகாப்பதாகும். சாலை பாதுகாப்பின் முக்கிய நோக்கம் சாலைகளில் பயணிப்போரை பாதுகாக்கிறது. காவல்துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை, சுகாதாரத் துறை, கல்வித் துறை ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து "விபத்து இல்லாத தமிழ்நாடு" என்ற இலக்கை அடைவதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை போக்குவரத்து ஆணையரகத்துடன் அரசு போக்குவரத்துக் கழகங்கள் இணைந்து செயல்படுத்தி வருகின்றன. அரசு போக்குவரத்துக் கழகங்களிலுள்ள பேருந்துகளில் கீழ்க்கண்ட சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது:-

| | |
|---|---|
| i) | தானியங்கி கதவு மூடும் அமைப்பு |
| ii) | ஓட்டுநர்களுக்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய பயிற்சி |
| iii) | ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் ஓய்விற்கான வசதிகளை மேம்படுத்துதல் |
| iv) | பயணங்களின்போது பேருந்து வழித்தடம் தொடர்பான அறிவிப்புகள் |
| v) | மறைவு பகுதிகளை காட்டும் கண்ணாடிகளை பொருத்துதல் |
| vi) | அதிக விபத்து நடக்கும் வழித்தடங்களை கண்டறிதல் |
| vii) | விபத்துகளின் அறிவியல் பகுப்பாய்வு |

### 6.3 **சாலை விபத்துகளைக் குறைக்க அரசு போக்குவரத்துக் கழகங்களால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

மாநிலத்தில் சாலை விபத்துகளைக் குறைக்க அரசு போக்குவரத்து கழகங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன:–

i) ஓட்டுநர் வாகனம் ஓட்டும்போது கைபேசிகளைப் பயன்படுத்துதல் மற்றும் பணியின்போது மது அருந்துதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளதோடு, இவ்விதிகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ii) ஓட்டுநர் பேருந்தினை எடுப்பதற்கு முன்னர் சுவாசப் பரிசோதனைக் கருவி மூலம் மது அருந்தியிருக்கிறாரா என்பதை கண்டறியும் சோதனைகள் நடத்தப்படுகின்றன.

iii) போக்குவரத்துத்துறை பறக்கும்படை உதவியுடன் சுவாசப் பரிசோதனை கருவிகளைக் கொண்டு பணியில் மது அருந்தியிருப்பவர்களைக் கண்டறிய திடீர் சோதனைகள் நடத்துதல். மேலும், காவல் துறையின் மூலம் தொடர் கண்காணிப்பில் ஈடுபடச் செய்தல்.

iv) அடிக்கடி விபத்து நடைபெறும் மறைவுப் பகுதிகள் வரைபடமாக்கப்பட்டு, தொடர்புடைய துறைகளுக்கு சரிசெய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

v) உயிரிழப்பு விபத்துகளை தொடர்ந்து ஏற்படுத்தும், ஓட்டுநர்கள் மீது, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

vi) பிற துறைகள் மற்றும் பங்குதாரர்களுடன் இணைந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு அவ்வப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது.

vii) ஓட்டுநர்களின் மனஅழுத்தத்தைக் குறைக்க யோகா மற்றும் தியான பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. தற்போது, பணியாளர்கள் தங்களது பணியினை தொடங்குவதற்குமுன் யோகா பயிற்சி மேற்கொள்கின்றனர்.

viii) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் நன்கு ஓய்வு எடுக்கும் வகையில், ஓய்வு அறைகளின் தரம் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, 105 ஓய்வறைகள் குளிர்சாதன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.

ix) தொடர்ந்து 25 ஆண்டுகளாக விபத்தில்லா சாதனை படைத்த 20 ஓட்டுநர்களுக்கு 4 கிராம் தங்க நாணயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும், தொடர்ந்து 10 ஆண்டுகளாக விபத்தில்லா சாதனை படைத்த 1,069 ஓட்டுநர்களுக்கு 100 கிராம் வெள்ளி நாணயம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக அரசு போக்குவரத்து கழக பேருந்துகளின் விபத்துகள் குறைந்துள்ளன. அரசு பேருந்து விபத்துகள் மூலம் உயிரிழந்தவர்களின் விவரங்கள் பின்வருமாறு:–

| **ஆண்டு** | **பேருந்து சேவைகளின் எண்ணிக்கை** | **உயிரிழப்பு விபத்துக்களின் எண்ணிக்கை** | **இறப்புகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 2019–2020 (கொரோனாவுக்கு முன்) | 19,290 | 867 | 969 |
| 2020–2021 (கொரோனா காலத்தில்) | 19,290 | 343 | 381 |
| 2021–2022 (கொரோனா காலத்தில்) | 19,290 | 705 | 762 |
| 2022–2023 | 18,723 | 906 | 1000 |
| 2023–2024 | 18,728 | 878 | 971 |

### 6.4 சாலைப் பாதுகாப்பு மாதம் மற்றும் வாரம்

சாலையை பயன்படுத்துபவரிடையே சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ஆண்டுதோறும் ஜனவரியில் சாலை

பாதுகாப்பு மாதம் மற்றும் வாரம் கடைபிடிக்கப்படுகிறது. போக்குவரத்து விதிகள், பாதுகாப்பாக வாகனம் ஓட்டும் நடைமுறைகள் மற்றும் பொறுப்பற்ற நடத்தையின் விளைவுகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் சாலை விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையை குறைக்க இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இந்த மாதத்தில் அனைத்து வயது பிரிவினரும் சாலைப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் நாடு முழுவதும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள், கருத்தரங்குகள் மற்றும் சாலை பாதுகாப்பு கண்காட்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பு மாதம் என்பது தனிநபர்கள் எச்சரிக்கையாக இருக்கவும், போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றவும், அனைவருக்கும் பாதுகாப்பான பயணத்தை உருவாக்கவும் நினைவூட்டுகிறது.

**7. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்**

மாநிலத்தின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை, செயல்படுத்தவும் மற்றும் மேற்பார்வை செய்யவும், நிதி ஆயுக் (NITI Aayog) நிர்ணயித்த குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு ஏற்ப தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அணுகுவதை எளிதாக்கும் வகையில், tnsdg.tn.gov.in–இல் இணைய அடிப்படையிலான தரவு கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

17 வகையான நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள், 169 குறிக்கோள்கள் மற்றும் 300 உலகளாவிய குறியீடுகள் உள்ளன. குறிப்பிட்ட சில இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடையதாகும். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது, இலக்கு 3: (சாலைப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்); இலக்கு 7: (மாசற்ற எரிசக்தியினை பெறுவதை உறுதி செய்தல்) இலக்கு 8: (தரமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி); இலக்கு 9: (தொழில், மீள்திறனையுடைய உள்கட்டமைப்பினை மேம்படுத்துதல்); இலக்கு 11: (நீடித்த நிலையான மாநகரங்கள் உருவாக்குதல்); இலக்கு 12: (பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி) மற்றும் இலக்கு 13: (காலநிலை மாற்றத்திற்கேற்ப மாசினை குறைத்தல்). நிலையான நகரங்களை உருவாக்குவதில், பொதுப் போக்குவரத்து ஒரு முக்கிய பங்கு வகுக்கிறது. இருப்பினும், இது நகரங்களின் நிலைத்தன்மைக்கு சவாலாக அமையும் என்பதால், போக்குவரத்தின் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களை பறைசாற்றுவது முக்கியமாகிறது.

பொருளாதார நிலைத்தன்மைக்கு நிறுவனங்கள் மற்றும் நாடுகளின் வளங்களை திறமையாக பயன்படுத்துவது அவசியமாகிறது, அவை நிலையான முறையில் செயல்படவும் இலாபத்தை ஈட்டவும் உதவுகின்றன. நிலையான இலாபம் இல்லாமல், நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை நிலைநிறுத்த முடியாது.

தரமான மருத்துவம், கல்வி, வேலை வாய்ப்புகள், திறன் மேம்பாடு மற்றும் சாதகமான சுற்றுச்சூழலை உறுதி செய்ய தமிழ்நாடு அரசு விரிவான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களின் மூலம் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு போக்குவரத்துத் துறை பொறுப்பேற்றுள்ளது.

பொது போக்குவரத்தானது, நகர்ப்புற மக்களின் அடிப்படை தேவையாகும். பொது போக்குவரத்து போதுமானதாகவும், நம்பகமானதாகவும், பாதுகாப்பானதாகவும் இருப்பதை அரசு போக்குவரத்துக் கழகங்கள் உறுதி செய்துள்ளன. பொது போக்குவரத்தை விரிவுபடுத்துவதன் வாயிலாக 2030–ஆம் ஆண்டிற்குள் அனைத்து குடிமக்களுக்கும் பாதுகாப்பான, போதுமான, அணுகக்கூடிய மற்றும் நிலையான போக்குவரத்து முறைகள் கிடைக்கச் செய்வதை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 11.2 நோக்கமாகக் கொண்டுள்ளது. அவ்வாறு செய்யும்போது, பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலைகளில் உள்ளவர்களான பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களின் தேவைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு கட்டணமில்லா பயணம் என்ற முன்னோடி திட்டம் மற்றும் அரசால் வழங்கப்பட்ட பல

இதர திட்டங்கள் அல்லது சலுகை அடிப்படையில் பெரும்பாலான மக்களுக்கு பயனளிக்கும் விதத்தில் இந்த இலக்கினை அடைய உதவி செய்கிறது.

பொதுப் போக்குவரத்தானது நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 11–ஐ 2030–ற்குள் அடைய நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அரசு போக்குவரத்துக் கழகங்களால் பின்வரும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் செயல்பாடு விவரம் பின்வருமாறு:–

- அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் கட்டணமில்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.
- தமிழ்நாடு முழுவதும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகள் மற்றும் மலைப் பகுதிகளில் இயக்கப்படும் சாதாரண கட்டணப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லா பயணம் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

- 40 சதவீதம் மற்றும் அதற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது துணையாளர், திருநங்கைகள் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.
- சென்னையில் இயக்கப்படும் மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மூத்த குடிமக்கள் பேருந்து பயண அட்டையினை பயன்படுத்தி மாதத்திற்கு 10 முறைகள் கட்டணமில்லா பயணம் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.
- அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், பெண் பயணிகள், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கென குறிப்பிட்ட இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 2,500 பேருந்துகள் மற்றும் 66 பேருந்து முனையங்கள் / பணிமனைகளில் எச்சரிக்கை பொத்தானுடன் கூடிய கண்காணிப்பு ஏற்பாட்டு முறை செய்யப்பட்டுள்ளது.

- மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகக்கூடிய வகையில் புதிய தாழ்தளப் பேருந்துகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- காற்று மாசினைக் குறைக்கும் பொருட்டு சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கு 500 மின்சாரப் பேருந்துகளை கொள்முதல் செய்தல்.
- மாசு அளவைக் குறைப்பதற்காக, 7,182 சுற்றுச்சூழலுக்கு உகந்த BS–VI இணக்கமான டீசல் பேருந்துகளை கொள்முதல் செய்தல்.
- மொத்த செலவு ஒப்பந்த மாதிரியின் கீழ் மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு மொத்தம் 1000 பேருந்துகளை அறிமுகம் செய்தல்.
- அனைத்து பேருந்துகளுக்கும் மின்னணு பயணச்சீட்டு முறையினை அமல்படுத்துவது.
- மின்சார செலவை குறைக்கும் வகையில் அரசு போக்குவரத்துக் கழக வளாகங்களில் மேற்கூரை சூரிய மின்னாற்றல் தகடுகள் அமைத்தல்

- மின்னாற்றலை சேமிப்பதற்கு மரபு சார்ந்த / சி.எஃப்.எல் பல்புகளுக்கு பதிலாக எல்.ஈ.டி பல்புகளை பொருத்துதல்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளின் மூலம் போக்குவரத்துத் துறை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு உறுதிபூண்டுள்ளது.

## 8. தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை

### 8.1 முன்னுரை

மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையானது சென்னை மற்றும் பல்வேறு மாவட்டத் தலைமையகங்களில் அமைந்துள்ள 20 அரசு தானியங்கி பணிமனைகள் மற்றும் மூன்று மண்டல துணை இயக்ககங்கள் உட்பட மாநிலம் முழுவதும் உள்ள அரசுத் துறை வாகனங்களைப் பராமரிப்பதற்காக, இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பாதுகாப்பு வாகனங்கள், மாண்புமிகு அமைச்சர்கள், மிகவும் முக்கிய பிரமுகர்கள், அரசுச் செயலாளர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களின் வாகனங்களின் பராமரிப்புத் தேவைகளை, பொது மேலாளரின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னையில் உள்ள அரசு மத்திய தானியங்கி பணிமனை கவனித்து வருகிறது. நவீன தொழில்நுட்பம், எரிபொருள் சிக்கனம், பாதுகாப்பு

மற்றும் வசதி அம்சங்களின் நன்மைகளைப் பெறுவதற்காக மாநில அரசுத் துறைகள் மூலம் புதிய தலைமுறை உயர் தொழில்நுட்ப வாகனங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. இந்த புதிய தலைமுறை உயர்தொழில்நுட்ப வாகனங்களின் பராமரிப்பு பணிகள் சென்னை அரசு மத்திய தானியங்கி பணிமனையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டல துணை இயக்குநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சேலம் ஆகிய மூன்று அரசு தானியங்கி பணிமனைகள் செயல்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர், வேலூர், தருமபுரி, நாகர்கோவில், கடலூர், ஈரோடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், காஞ்சிபுரம், திருநெல்வேலி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள அரசு தானியங்கி பணிமனைகள் தானியங்கி பொறியாளர் கட்டுப்பாட்டிலும், தூத்துக்குடி, விழுப்புரம், உதகமண்டலம், விருதுநகர் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் பொதுமுதலாள் / தொழில்நுட்ப

உதவியாளரின் கட்டுப்பாட்டின்கீழ் அரசு தானியங்கி பணிமனைகள் இயங்கி வருகின்றன.

## 8.2 நோக்கங்கள்

மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மாநிலம் முழுவதும் இயக்கப்படும் ஏறத்தாழ 20,688 அரசுத் துறை வாகனங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புத் தேவைகளை கவனித்து வருகிறது. தலைமைச் செயலகம் அருகிலுள்ள சேவை நிலையமானது முக்கிய பிரமுகர்களின் வாகனங்களுக்கு சிறு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளவும், அரசுச் செயலாளர்களின் வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. இத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் 10 எரிபொருள் விநியோக நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அனைத்து அரசுத் துறை வாகனங்களின் பராமரிப்புத் தேவைகளை சிக்கனமான மற்றும் திறமையான முறையில், தரமான மற்றும் முறையான

சேவையை வழங்குவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை, வனத்துறை, காவல்துறை (102 crpc), வருவாய்துறை, உணவு பொருட்கள் வழங்கல் துறை ஆகிய துறைகள் மூலம் பறிமுதல் செய்யப்படுகின்ற ஊர்திகளை ஆய்வு செய்து, மதிப்பீடு செய்து தற்போது நடைமுறையில் இருக்கும் அரசாணைகளின்படி, விற்பனை செய்யும் பணிகளை தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மேற்கொண்டு வருகிறது.

வாகனங்களுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதன் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் மற்றும் வாகனங்கள் பராமரிப்பு பணிக்காக காத்திருக்கும் கால அளவைக் குறைக்கவும், சென்னை, திருச்சி, விழுப்புரம் ஆகிய இடங்களிலுள்ள அரசு தானியங்கி பணிமனைகள் ரூ.70,73,206/- செலவில், நவீனமயமாக்கம் செய்து மேம்படுத்தப்படும் என்ற மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, இத்திட்டம் 28.02.2024

அன்று மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது.

**துறையின் செயல்பாடு**

i. 2023–2024–ஆம் (01.04.2023 முதல் 30.04.2024 வரை) நிதியாண்டில் இத்துறையின் மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை – 31,451

ii. 2023–2024–ஆம் (01.04.2023 முதல் 30.04.2024 வரை) நிதியாண்டில் பயனற்றதென கழிவு செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:–

| கனரக மோட்டார் வாகனங்கள் | மகிழுந்து | ஈப்பு | வேன் | மோட்டார் சைக்கிள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 119 | 115 | 611 | 149 | 546 | 1540 |

## 9. துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு (தமிழ்நாட்டில் இரயில்வே திட்டங்கள்)

நில நிர்வாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் புதிய இரயில் பாதைகள், இரட்டை இரயில் பாதைகள் மற்றும் அகல இரயில் பாதைகள் அமைப்பதற்கு நிலங்களை கையகம் செய்து இரயில்வே துறைக்கு வழங்குவதற்கு போக்குவரத்துத் துறை முகமை துறையாக செயல்படுகிறது.

### 9.1 மணியாச்சி – நாகர்கோவில் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டம், மணியாச்சி முதல் நாகர்கோவில் வரை 102 கி.மீ தூரத்திற்கு இரட்டை அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்தில் தூத்துக்குடி, திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய 3 மாவட்டங்கள் உள்ளடங்கியுள்ளன. மேற்கண்ட மாவட்டங்களில் 68.39.23 ஹெக்டேர் பட்டா நிலங்கள் மற்றும் 15.99.78 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்ய அரசால் நிர்வாக அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

**9.2 திண்டிவனம் – நகரி அகல இரயில் பாதை திட்டம்**

திண்டிவனம் முதல் நகரி வரை 184.45 கி.மீ தூரத்திற்கு இணைக்கும் புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். திண்டிவனம் (தமிழ்நாடு) – நகரி (ஆந்திர பிரதேசம்) இடையே, திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் ஆகிய நான்கு மாவட்டங்களை கடந்து செல்லும் வகையில் இரயில் பாதை அமையவுள்ளது. மேற்காணும் மாவட்டங்களில் 562.71 ஹெக்டேர் பட்டா நிலங்கள் மற்றும் 122.04 ஹெக்டேர் புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்த நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள்

மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

## 9.3 சின்னசேலம் – கள்ளக்குறிச்சி புதிய அகல இரயில் பாதை திட்டம்

இத்திட்டம், சின்னசேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை 16 கி.மீ தூரத்திற்கு புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்காக கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 44.91 ஹெக்டேர் பட்டா நிலங்கள் மற்றும் 2.72.50 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகப்படுத்த நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது.

**9.4 விழுப்புரம் – திண்டுக்கல் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்.**

இத்திட்டம், தமிழகத்தின் வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களை இணைத்து அதிக பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்யும் மதிப்புமிக்க திட்டமாகும். இத்திட்டத்திற்காக விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 141.00.97 ஹெக்டேர் பட்டா நிலங்கள், 40.92.61 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை, கையகம் செய்ய நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

**9.5 மதுரை – தூத்துக்குடி இரட்டை அகல இரயில் பாதை திட்டம்**

இத்திட்டம் மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களை

உள்ளடக்கியதாகும். மதுரை மற்றும் தூத்துக்குடி இடையிலான அகல இரயில் பாதை அமைப்பதற்கு 95.70.17 ஹெக்டேர் பட்டா நிலங்கள் மற்றும் 21.23.30 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்ய நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

**9.6 கன்னியாகுமரி – திருவனந்தபுரம் இரட்டை அகல இரயில் பாதை திட்டம்**

இத்திட்டமானது கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோவில், நாகர்கோவிலிலிருந்து இரணியல் மற்றும் இரணியலில் இருந்து பாரசாலா வரை மூன்று அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் 46.59.14 ஹெக்டேர் பட்டா நிலங்கள் மற்றும் 3.96.89 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்வதற்கு நிர்வாக

அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

**9.7 மதுரை – தூத்துக்குடி வழி அருப்புகோட்டை புதிய அகல இரயில் பாதை திட்டம்.**
**(பகுதி–1) (மீளவிட்டான் – மேல்மருதூர்)**

இத்திட்டம், மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் சுமார் 143.5 கி.மீ. உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக மீளவிட்டான் – மேல்மருதூர் வரை 18 கி.மீ தூரத்திற்கு புதிய இரயில்பாதை அமைக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்காக, தூத்துக்குடி மாவட்டத்தில் 14.99 ஹெக்டேர் பட்டா நிலங்கள் மற்றும் 1.91.90 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்வதற்கு நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில்

உள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**பகுதி–2**

இத்திட்டத்திற்காக, தூத்துக்குடி, மதுரை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 702.29.77 ஹெக்டேர் பட்டா நிலங்கள் மற்றும் 75.35.32 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை கையகம் செய்வதற்கு நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலங்களை நில உரிமை மாற்றம் செய்வதற்கான முன்மொழிவுகள் மாவட்ட அளவில் பரிசீலனையில் உள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 9.8 சென்னை கடற்கரை – கொருக்குப்பேட்டை இடையே 3–வது மற்றும் 4–வது புதிய இரயில் பாதை திட்டம்

சென்னை கடற்கரை முதல் கொருக்குப்பேட்டை வரை 3–வது மற்றும் 4–வது புதிய இரயில் பாதையானது சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் வழியாக செல்கிறது. இது சென்னை கடற்கரை மற்றும்

கும்மிடிப்பூண்டி இடையிலான புறநகர் இரயில் பயணிகளின் சேவைக்காக உருவாக்கப்பட்டுள்ளது. மேற்காணும் மாவட்டங்களில் 506 சதுர மீட்டர் நிலப்பரப்பை கையகப்படுத்த அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்தப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

### 9.9 கொருக்குப்பேட்டை – எண்ணூர் இடையே 4–வது புதிய இரயில் பாதை திட்டம்

கொருக்குப்பேட்டை முதல் எண்ணூர் வரை 4–வது புதிய இரயில் பாதை அமைப்பதற்காக, சென்னை மாவட்டத்தில் 6464 சதுர மீட்டர் நிலத்தை கையகப்படுத்த அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. நிலம் கையகப்படுத்தப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

## 10. சாலை போக்குவரத்து நிறுவனம்

### 10.1 அறிமுகம்

சாலை போக்குவரத்து நிறுவனம் 1860–ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 1976–ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. சாலை போக்குவரத்து நிறுவனம், பேருந்து போக்குவரத்து தொடர்பான மேம்பாட்டு பணிகள், சாலைப் பாதுகாப்பு ஆய்வு மற்றும் ஆராய்ச்சி பணிகள், பேருந்து தரம் மற்றும் பேருந்து மேலாண்மை மற்றும் பேருந்து கொள்முதல், போக்குவரத்துக் கழக அலுவலர்கள் / பணியாளர்கள் புத்தாக்க பயிற்சி அளித்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

### 10.2 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

சாலை போக்குவரத்து நிறுவனம், தற்போது கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மையங்களை கும்மிடிப்பூண்டி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலும் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுடன் இணைந்து கீழ்க்காணும் 15 இடங்களிலும் பயிற்சி அளித்து வருகிறது:–

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | திருவள்ளூர் | 6. | மதுரை | 11. | பொள்ளாச்சி |
| 2. | வேலூர் | 7. | திண்டுக்கல் | 12. | ஈரோடு |
| 3. | விழுப்புரம் | 8. | திருநெல்வேலி | 13. | கும்பகோணம் |
| 4. | சேலம் | 9. | நாகர்கோவில் | 14. | காரைக்குடி |
| 5. | தருமபுரி | 10. | விருதுநகர் | 15. | புதுக்கோட்டை |

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியங்களின் நிதியுதவி மூலம் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சியும் நடத்தப்பட்டு வருகிறது.

மேற்கண்ட ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளில், கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் புத்தாக்க பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2022–2023 வரை | 2023–2024 | மொத்தம் |
| 1. | கும்மிடிப்பூண்டி | 25,249 | 407 | 25,656 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 2,738 | 136 | 2,874 |
| 3. | இதர தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கனரக வாகன பயிற்சி மையங்கள் | 37,327 | 708 | 38,035 |
| **மொத்தம்** | | **65,314** | **1,251** | **66,565** |
| புத்தாக்க பயிற்சிகள் கும்மிடிப்பூண்டியில் | | 68,287 | 1,548 | 69,835 |

### 10.3 இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள்

1997–ஆம் ஆண்டு இரு இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் இலகுரக வாகன பயிற்சியளிப்பதற்கு சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஆரம்பிக்கப்பட்டது. பொது மக்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி மட்டுமல்லாமல் நிதியுதவி திட்டங்களின் மூலம் சென்னை பெருநகர மாநகராட்சி போன்ற பிற துறைகளின் ஓட்டுநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது. இலகுரக வாகன ஓட்டுநர் பயிற்சி முடித்தவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2022–2023 வரை | 2023–2024 | மொத்தம் |
| 1. | தரமணி, சென்னை | 3,456 | 179 | 3,635 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 1,230 | 51 | 1,281 |
| **மொத்தம்** | | **4,686** | **230** | **4,916** |

மேலும் அரசாணைப்படி, அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களின் கனரக வாகன ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தலுக்காக ஒரு நாள் சிறப்புப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 2022–2023 வரை | 2023 – 2024 | மொத்தம் |
| 1. | தரமணி, சென்னை | 7,386 | 33 | 7,419 |
| 2. | கும்மிடிப்பூண்டி | 3,696 | 04 | 3,700 |
| 3. | திருச்சிராப்பள்ளி | 25,707 | 23 | 25,730 |
| **மொத்தம்** | | **36,789** | **60** | **36,849** |

## 10.4 திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்

போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அட்டவணை தயாரிக்கப்பட்டு, அப்பயிற்சி, தரமணியிலுள்ள சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. மார்ச் 2024 வரை, 1908 பயிற்சி வகுப்புகளின் மூலம் மொத்தம் 44,612 போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

மேலும், போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்கள் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் சாலை போக்குவரத்து நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றது.

### 10.5 சாலை போக்குவரத்து இதழ்

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு இதுவரை போக்குவரத்து சம்பந்தமாக பல ஆராய்ச்சி அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. மேலும், அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு பயன்படும் வகையில் விபத்து விசாரணை கையேடு என்ற வழிகாட்டியினை வெளியிட்டுள்ளது. சாலை போக்குவரத்து, சாலைப் பாதுகாப்பு, விபத்து ஒப்பீடு குறித்த தகவல்கள் அடங்கிய சாலை போக்குவரத்து இதழினை சாலை போக்குவரத்து நிறுவனம் வெளியிடுகிறது.

**10.6 கொள்முதல் நடவடிக்கைகள்**

அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தேவையான பேருந்து அடிச்சட்டங்கள், உருளிப்பட்டை, முழுவதுமாக கட்டப்பட்ட பேருந்துகள், பேருந்து கூண்டு கட்டுதல், பயணச்சீட்டு அச்சிடுதல், உருளிப்பட்டை புதுப்பிக்கத் தேவையான அடிப்படை பொருட்கள் மற்றும் மசகு எண்ணெய் (Lubricants) ஆகியவற்றினை கொள்முதல் செய்வதற்கு சாலை போக்குவரத்து நிறுவனம் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) செயல்பட்டு வருகிறது. 2023–2024–ஆம் நிதியாண்டில் கொள்முதல் ஆணைகள் ரூ.734.52 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளன.

**10.7 உபகரணங்கள் பரிசோதனை மற்றும் தரக் கண்காணிப்பு**

சாலை போக்குவரத்து நிறுவனத்திலுள்ள உபகரணங்கள் பரிசோதனைக் கூடத்தில் 54 வகையான மோட்டார் வாகன உதிரி பாகங்கள் ASRTU மற்றும் BIS விவரக் குறியீடுகளின்படி, பரிசோதனை செய்யும் வசதி உள்ளது. இப்பரிசோதனைக் கூடத்தில்

மார்ச் 2024 வரை 5,932 மாதிரிக் கூறுகள் (Samples) பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

## 10.8 கல்வி நிறுவனங்கள்

சாலை போக்குவரத்து நிறுவனம் மூலம், அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இடஒதுக்கீட்டு பாதுகாப்புடன் கீழ்க்காணும் கல்வி நிறுவனங்களை தொடங்கியுள்ளது.

1. அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்தவமனை, பெருந்துறை (முன்னர் சாலை போக்குவரத்து நிறுவனம் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பெருந்துறை)
2. அரசு பொறியியல் கல்லூரி, ஈரோடு (முன்னர் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரி, ஈரோடு)
3. அரசு பல்தொழில்நுட்ப கல்லூரிகள், குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி (முன்னர் சாலை போக்குவரத்து நிறுவனம் பல் தொழில்நுட்ப கல்லூரிகள் கல்லூரிகள், குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி)

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை (PMCH) 2019–ஆம் ஆண்டு முதல் அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீடு பாதுகாப்புடன் மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறையால் (அரசாணை (நிலை) எண்.308, போக்குவரத்து (பி1) துறை, நாள்.24.10.2018) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.165, உயர்கல்வித் (ஜே2) துறை, நாள். 27.08.2021–இன்படி, 2021–2022–ஆம் கல்வியாண்டு முதல் அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீட்டு பாதுகாப்புடன் சாலை மற்றும் போக்குவரத்து பொறியியல் கல்லூரியை அரசு பொறியியல் கல்லூரியாக மாற்றி, உயர்கல்வி துறை ஆணை வெளியிட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.25, 26 & 27 உயர்கல்வித் (பி2) துறை, நாள். 09.02.2023–ன்படி 2022–2023–ஆம் கல்வியாண்டு முதல் அரசு

போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீட்டு பாதுகாப்புடன் சாலை போக்குவரத்து நிறுவன பல்தொழில்நுட்ப கல்லூரிகளை அரசு பல்தொழில்நுட்ப கல்லூரிகளாக மாற்றி, உயர்கல்வி துறை ஆணை வெளியிட்டுள்ளது.

இக்கல்லூரிகள் இதுவரை 1,921 மருத்துவர்களையும், 11,099 பொறியியல் பட்டதாரிகளையும், 13,899 பட்டயப் பொறியாளர்களையும் உருவாக்கியுள்ளன.

**11. பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு**

பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவானது ஏப்ரல் 1984–ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்துடன், ரூ.10.00 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் சாலைப் போக்குவரத்துத் துறையில் ஆலோசனை சேவைகளை வழங்குவதாகும்.

- போக்குவரத்து மற்றும் போக்குவரத்து பொறியியல், நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு மற்றும் எண்முறை (Digital) மயமாக்கல் ஆகிய துறைகளில் இந்நிறுவனம் இதுவரை சுமார் 67 ஆலோசனை திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு இத்திட்டங்கள் சிறந்த பங்களிப்பை வழங்குகிறது.

- பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட சில குறிப்பிடத்தக்க திட்டங்களாவன:– 1. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கான இணையதளப் பயணச்சீட்டு முன்பதிவு முறையின் செயல்பாடு மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பை கண்காணித்தல் 2. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான

ஒருங்கிணைந்த பயணிகள் குறைகள் மற்றும் குறை தீர்க்கும் முறையை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் 3. அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான பொது இணையதளம்.

- தானியங்கி கட்டண வசூல் முறையை அமல்படுத்துதல், டீசல் பேருந்துகளுக்கு மாற்றாக சுற்றுசூழலுக்கு உகந்த பேருந்துகளை வாங்குதல், இணையதள பேருந்து பயண அட்டை முறையை அறிமுகப்படுத்துதல் போன்ற திட்டங்களில் பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு தற்போது ஈடுபட்டுள்ளது.
- அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கான வழித்தட சீரமைப்பு ஆய்வினை மேற்கொண்டு வருகிறது. மேலும், புதிய திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் அதன் வருவாய் ஆதாரத்தை அதிகரிக்க ஒருங்கிணைந்த முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சிகள் நிறுவனத்தின் நிலையை மேலும் வலுப்படுத்தும்.

## 12. முடிவுரை

மாநிலத்திற்குள் பயணம் செய்ய பொதுப் போக்குவரத்து முதன்மையான பயண வழிமுறையாகத் தொடர்கிறது. எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்கள் 10,132 பேருந்து வழித்தடங்களில் 18,728 பேருந்துகளை இயக்கி வருகின்றன. வார இறுதி நாட்கள் மற்றும் பண்டிகை காலங்களில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவதால் பேருந்துகளின் எண்ணிக்கை 20,260–ஆக அதிகரித்துள்ளது. தினசரி பேருந்துகளின் இயக்க தூரம் 79 இலட்சம் கிலோமீட்டராகும் மற்றும் 1.76 கோடி பயணிகள் பேருந்துகளில் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். அதிகரித்து வரும் செலவுகள் மற்றும் நிதிப் பற்றாக்குறை இருந்தபோதிலும், 2018–ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட அளவிலேயே பேருந்து பயணக் கட்டணம் தற்போதும் உள்ளது.

பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமை அளித்து, 2024–2025 நிதியாண்டிற்குள் 7,182 புதிய டீசல்

பேருந்துகள், 500 மின்சாரப் பேருந்துகள் மற்றும் மொத்தச் செலவு ஒப்பந்த மாதிரியின்கீழ் மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்காக கூடுதலாக 500 மின்சாரப் பேருந்துகள் உள்பட மொத்தம் 8,182 புதிய பேருந்துகளை அறிமுகம் செய்ய அரசு முன்னுரிமை அளித்துள்ளது. மேலும், முழுமையாக புதுப்பிக்கப்பட்ட 1,500 பேருந்துகள் பயணிகளின் வசதியை மேம்படுத்தும் வகையில் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (CNG), திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) முதலிய மாற்று எரிபொருளின் உதவியுடன் இயங்கக்கூடிய சுற்றுச்சூழலுக்கு உகந்த பேருந்துகளை இயக்குவதற்கான சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதலமைச்சரின் முதன்மைத் திட்டமான விடியல் பயணத் திட்டத்தில், பெண்கள் 490 கோடி பயணங்களையும், திருநங்கைகள் 29 இலட்சம் பயணங்களையும், மாற்றுத் திறனாளிகள் 3.93 கோடி பயணங்களையும் மேற்கொண்டுள்ளனர். இந்த

முன்முயற்சியானது பொருளாதார ரீதியாக பின்தங்கிய பயனாளிகளுக்கு வேலை, சுகாதாரம் மற்றும் சமூக பொருளாதார முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கிறது, சராசரியாக ஒவ்வொரு பெண் பயணியும் பயணக் கட்டணத்திற்கு ஈடாக மாதத்திற்கு ரூ.888/- சேமித்துள்ளனர். இச்சேமிப்பு பெண்களுக்கு தேவையான பொருட்களை வாங்க உதவுகிறது. விடியல் பயணத் திட்டம் அரசு போக்குவரத்துக் கழகங்களை நிதி ரீதியாக ஆதரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும், உலக வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு, மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான சாத்தியக்கூறு இடைவெளி நிதியை வழங்குகின்றன. எதிர்வரும் காலங்களில் அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிலைத்தன்மையை மேம்படுத்த சாத்தியக்கூறு இடைவெளி நிதி மூலம் ஆதரவு தரப்படும்.

போக்குவரத்து அமைப்பில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப பல்வேறு செயல்பாடுகளை ஒருங்கிணைப்பது அவசியமாகும். இதில் தானியங்கி வாகன இருப்பிடம் கண்டறியும் அமைப்பு, பேருந்து திட்டமிடல், பணியாளர் மேலாண்மை, பணியாளர்களுக்கான செயலி மற்றும் வலைதளத்தின் பயன்பாடுகள், பேருந்து வருகை, பேருந்துகளின் நிகழ்நேர இருப்பிடம் மற்றும் எதிர்பார்க்கப்படும் வருகை நேரம், பேருந்து வழித்தட தகவல்களை பயணிகள் அறிந்து கொள்ளும் வசதிகள், மறைகாணி கண்காணிப்பு, அவசர அழைப்பு பொத்தான்கள், மின்னணு வருகை பதிவேடு மற்றும் "X" வலைதளம் எனப்படும் சமூக ஊடக தளத்தின் மூலம் உடனடி அறிவிப்புகள் ஆகியவை அடங்கும். கூடுதலாக, தானியங்கி கட்டண வசூல், ரொக்கமில்லா பரிவர்த்தனை மற்றும் இணையவழியில் பேருந்து பயண அட்டை வழங்குதல் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. பயணிகளுக்கு

தேசிய பொது இயக்க அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பேருந்து நிறுத்தங்கள், பேருந்து நிலைகள், பேருந்து நிலையங்கள், தேவையின் அடிப்படையில் வழித்திட்டமிடல், அரசு போக்குவரத்துக் கழகங்களின் சொத்துக்கள் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகளை வடிவமைக்க தமிழ்நாடு புவியியல் தகவல் அமைப்பு (TNGIS) பயன்படுத்தப்படும்.

பொது – தனியார் கூட்டாண்மை பங்களிப்பு முறையில் அல்லது சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் போன்ற பொதுத் துறை நிறுவனங்களின் உதவியுடன் அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகள் / பேருந்து முனையங்களை வணிக வளர்ச்சியுடன் நவீனமயமாக்குவதன் மூலம் கட்டணமில்லா வருவாயை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருவாய் ஈட்டும் முயற்சிகளில் பேருந்துகளில் விளம்பரம் செய்தல், வரவிருக்கும் பேருந்து நிறுத்தங்களை அறிவித்தல்,

தரகு (commission) தொகை அடிப்படையில் பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை நிலையங்களை அமைத்தல் மற்றும் மின்னேற்றல் (E–charging) நிலையங்களை அமைத்தல் ஆகியவை அடங்கும்.

நிறுவன அர்ப்பணிப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் பயனுள்ள நடவடிக்கைகள் மூலம் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தின் விளைவாக, 2022–2023–ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 2023–2024–ஆம் நிதியாண்டில் 28 உயிரிழப்பு விபத்துகள் குறைந்துள்ளது. மேலும், வருங்காலங்களில் இந்த எண்ணிக்கை குறைய வாய்ப்புள்ளது. விபத்துகளைத் தடுக்க, அனைத்து அரசுப் பேருந்துகளிலும் கதவுகள் பொருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக, அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளால் ஏற்படும் மோட்டார் வாகன விபத்துச் செலவினை குறைக்க உதவும்.

பேருந்துகள் இயக்க இயலாத குறுகலான சாலை உள்ள கடைக் கோடி பகுதிகளுக்கு சிறிய பேருந்துகளைப் பயன்படுத்தி போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

பேருந்து போக்குவரத்து அமைப்பு எதிர்கொண்ட சவால்களை சமாளிக்க அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வமைப்பை மேம்படுத்தி, அதன் நிலைத்தன்மையை உறுதிசெய்யும் நோக்கில் அரசு செயல்படுகிறது. எதிர்காலத்திற்காக நன்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் அனைவரும் அணுகக்கூடிய போக்குவரத்து அமைப்பை உருவாக்குவதே இத்துறையின் நோக்கமாகும்.

**சா. சி. சிவசங்கர்**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**

# இணைப்பு

## மானியக் கோரிக்கை எண். 48

## போக்குவரத்துத் துறை

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2024–2025

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | துறை தலைமையகம் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | போக்குவரத்துத்துறை, தலைமைச் செயலகம் | 7,309,72,37 | 1,165,00,02 | 1,235,80,09 | 9,710,52,48 |
| 2 | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை | 76,36,94 | - | - | 76,36,94 |
| **மொத்தம்** | | **7,386,09,31** | **1,165,00,02** | **1,235,80,09** | **9,786,89,42** |





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு, புதிதாக 1,666 பேருந்துகளை வாங்க உத்தரவிட்டதில் முதற்கட்டமாக 100 BS-VI பேருந்துகளை, 20.01.2024 அன்று, சென்னை, மாநகர போக்குவரத்து கழகத்தின் மத்திய பணிமனையில், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.




மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், போக்குவரத்துத் துறை சார்பில், 50 புதிய பேருந்துகள் இயக்கத்தை, 28.02.2024 அன்று, சென்னை, கிண்டி, போக்குவரத்து ஆணையரகத்தில், பொது மக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.




மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்கள் (E.T.M.) மூலமாக பயணச்சீட்டு (e-Ticketing) வழங்கும் திட்டத்தினை, 28.02.2024 அன்று, சென்னையில் தொடங்கி வைத்து, பயணச்சீட்டு இயந்திரத்தை நடத்துனரிடம் வழங்கினார்.



மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டத்திற்கு உட்பட்ட குன்னத்தில் புதிய பணிமனையை, 14.03.2024 அன்று தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணத்தின் முதல் பெண் நடத்துனருக்கான வாரிசுதாரர் கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை வழங்கினார்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.